# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்



## வானக்குயில்

............ பாடிக்கோண்டே போகின்றது. அது உள்ளத்தைக் கோள்ளை கோள்ளும் அபூர்வ சக்தி வாய்ந்தது. துன்பத்தைப்போக்கும் துணையா யமைந்தது. மக்களது வாழ்க்கையின் நாத மாயும், ஜீவ சக்தியாயும் த்வனிக்கின்றது.

தோடர்ச்சியாய்ப் படித்துப்
பாருங்களேன் தேரியும்

---

## உளுத்த இதயம்

புதியது ! அற்புதமானது !! சிறியது !!!

விற்பனைக்குத் தயாராகிவிட்டது

**விலை நான்கே அணுதான்**

ஜனவரி
1938

## வாழ்க்கையின் நாதம்

(ஆரம்பம்)

அணா
2

பெரிய குடும்பத்தில்
செல்வாக்குடன் பிறந்து
மேன்மையாய் வளர்ந்
தான்



— துரைராஜா —

எம். கே. ராதா

**அவன் இந்திராணியின் மீது கொண்ட காதல் தூய்மையானது**
**பாவம்! அவள் ஓர்**

# அனாதைப் பெண்

அவளை செல்வச் சமூகம் வெறுத்தது. விதி அவளை ஸினிமா கம்பெனிக்கு இழுத்துச் சென்றது. கண்ணியமுள்ள துரை அதைக் கண்டு ஆத்திரம் அடைகிறான். இந்திராணி, அனாதை நிற்கதியானாள். அப்புறம் அவள்........................

**நடிகர்கள் :**

| | |
|---|---|
| எம். கே. ராதா | டி. ஏ. சுந்தராம்பாள் |
| பி. யு. சின்னப்பா | டி. எஸ். கிருஷ்ணவேணி |
| எஸ். எம். சுப்ரமண்யம் | சுப்புலக்ஷ்மி |
| எல். நாராயண ராவ் | வி. வி. நாகரத்தினம் |
| எம். ஆர். சாமிநாதன் | பி. ஆர். மங்களம் |
| பி. ஜி. குப்புசாமி | எம். ஆர். மங்களாம்பாள் |
| இ. கிருஷ்ணமூர்த்தி | பேபி கல்யாணி |

டைரெக்டர் : **ஆர். பிரகாஷ்**

வசனம் : **ஏ. ஏ. சோமயாஜுலு**

பாட்டு : **பாபநாசம் சிவன்**

மியூசிக் : ஸ்ரீவை - வி. எஸ். பி. சாரதி சகோதரர்கள்

தயாரிப்பவர்கள் :—

**ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்,**
**திருப்பூர்.**

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் | ஈச்வர ௵ மார்கழி ௴ | இதழ் |
|---|---|---|
| 15 | ஜனவரி 1938 | 1 |


## திருப்பாவை

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்த நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோ
டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

182014.

# வெளிநாட்டுச் செய்திகள்

---

## சீனு

சீனுவை கொஞ்சங் கொஞ்சமாக ஜப்பான் ஆக்ரமித்து வருவதைத் தடுத்து போரை ஒழுங்கான முறையில் நடத்துவதற்காகப் பலவித மாறுதல்களைச் சீன சர்க்கார் செய்வதுடன், பொதுவுடைமைக்காரர்களுக்கு அதிகமான ஆதிக்கம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

நான்கிங்கியிலிருந்து பின் வாங்கிய சீனர் 53000 சவங்களையும், 108 பீரங்கிகள், 1367 மெஷின் கன்கள், உள்பட ஏராளமான யுத்த தளவாடங்களையும் விட்டு விட்டுச் சென்றனராம்.

## அமெரிக்காவிடம் ஜப்பானின் மன்னிப்பு

"பானே" சம்பவத்துக்காக ஜப்பானிய சர்க்கார் மன்னிப்பு கேட்டுக்கொண்டது மல்லாமல், நஷ்ட ஈடு கொடுப்பதாகவும் கூறிவிட்டதால் அமெரிக்க சர்க்கார் திருப்தி யடைந்திருக்கின்றனர்.

## ஸ்பெயின் யுத்தம்

ஸ்பெயின் சர்க்காரின் ராணுவத்துக்காக 17 தொண்டர்களையும் 2 கோடி தோட்டாக்கள், 20 விமானங்கள், உணவுப் பொருள்களையும் "லாபாய்" என்ற ஸ்பெயின் கப்பல் மெக்ஸிகோவிலிருந்து ஏற்றி வந்திருப்பதாகத் தெரிகிறது.

## ஜப்பானுக்கு இதாலியின் உதவி

ஜப்பானிடம் நேசப்பான்மை காட்டவும், அங்குள்ள நிலைமையைக் கண்டறியவும், இத்தாலிய ராணுவப் பிரதிநிதிகள் சேர்ந்த ஒரு கோஷ்டி ஜப்பானுக்குப் போகிறதாம்.

## அயர்லாந்து—இங்கிலாந்து வர்த்தகம்

தம் தேசத்து கொழுத்த கால் நடைகளை இங்கிலாந்துக்கு அனுப்பிப் பதிலுக்கு தமக்குத் தேவையான நிலக்கரியை வாங்கிக் கொள்ள அயர்லாந்து ஏற்பாடு செய்கிறது.

---

# உள் நாட்டுச் செய்திகள்

---

## ஜனவரி ௴ 9உ சீனு தினம்

### ஸ்ரீ. ஜவஹர்லால் அறிக்கை

இந்தியா பூராவும் ஜனவரி 9உ ஞாயிற்றுக்கிழமை சீனு தினமாகக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அன்று பொதுக் கூட்டங்கள் நடத்தி சீனுவுக்கு வைத்திய வசதிகள் செய்து கொடுப்பதற்காகப் பண வசூல் செய்ய வேண்டும். வசூலாகும் பணத்தை "அ. இ. கா. கமிட்டி, அன்னிய இலாகா, ஸ்வராஜ்ய பவனம், அலஹாபாத்" என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்."

...வனக் காப்பக...

## காங்கிரஸிற்குள் தனி ஸ்தாபனம் கூடாது

"காங்கிரஸ் மகாசபை அநேக சேவைகளுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிறது. ஒரு குறிப்பிட்ட சேவையை விரும்பும் கோஷ்டியினர் அந்தந்த குறிப்பிட்ட சேவை விஷயமாகத் தனித் தனியாக ஸ்தாபனங்கள் நிறுவுவதென்று ஆரம்பித்தால், காங்கிரஸ் துண்டு துண்டாக உடைந்து விடும். இவ்விதம் ஸ்தாபனங்களை நிறுவ காங்கிரஸிற்கு உரிமை யிருக்கிறது. ஆனால், எந்த காங்கிரஸ்காரர்களும் தனியாக ஒரு ஸ்தாபனம் நிறுவி காங்கிரஸ் பெயரில் வாழ்வதென்பதும், காங்கிரஸ் பெயரை உபயோகிப்ப தென்பதும் கூடாது." —ஸ்ரீ. மகாதேவ தேசாய் (ஹரிஜன்)

## தனி ஸ்தாபனம் வேண்டாம்

### முஸ்லீம் மாணவர்களின் தீர்மானம்

கல்கத்தாவில் நடந்த அகில இந்திய முஸ்லிம் மாணவர்களின் கூட்டத்தில் தனியான வகுப்புவாத ஸ்தாபனம் போன்ற சங்கங்கள் வேண்டாமென்று தீர்மானிக்கப்பட்டது.

## நமது மாகாண விவசாயிகளின் கடன் சுமை

மொத்தம் சுமார் 200 கோடி ரூபாய். சிறிய விவசாயி ஒரு ரூபாய் நிலவரி கொடுததால் அவனுக்கு 30 ரூபாய் கடனிருக்கிறது. பெரிய நிலச்சுவான்தார்களுக்கு ஒரு ரூபாய் நிலவரிக்கு 8 ரூபாய் கடனிருக்கிறது.

## 20,000 பேர்களுக்காக 160 டாக்டர்களா ?

இந்தியாவில் வேலையாயிருக்கும் பிரிட்டிஷார்களும், அவர்களது குடும்பங்களுமாகச் சேர்ந்து 20,000 இருக்கலாம். இவர்களுக்காக 160 ஐரோப்பிய ஐ. எம். எஸ்காரர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலரின் மனதைத் திருப்தி செய்ய உயர்ந்த சம்பளங்களில் இவர்களை நியமிக்க இந்தியாவில் பணம் கிடையாது. —டாக்டர். பி. ஸி. ராய்.

---

# சென்னை ஸ்டுடியோச் செய்தி

---

## அனாதைப் பெண்

இதுவரை 17,000 அடிகள் எடுத்தாகிவிட்டது. எடுத்ததுவரை போட்டுப் பார்த்ததில் திருப்திகரமாக இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். டைரக்டர் ஸ்ரீமான் கே. சுப்ரமணியமும் பார்த்துவிட்டு, இது ஓர் மகத்தான வெற்றியாக வெளிவருமென எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். ஸெட்டிங்குகளை மிகவும் உன்னதமான முறையில் சமயத்துக்குத் தகுந்த மாதிரி இயற்கையாக ஸ்ரீமான் கே. ஆர். சர்மா வெகு சிரத்தையுடன் நிறுவி வருகிறார். ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் புகழ்பெற்ற ஸ்ரீ. கோபால

மஹுரேஷ் பட எடுப்பில் தன் முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார். சுத்தமாயிருந்தால் ஒழிய ஸ்ரீமான் விச்வநாத் ரிக்கார்ட் செய்வதில்லை. இதுவரை தனக்கு கிடைக்காத வசதிகளெல்லாம் இப்போது கிடைத்திருப்பதால் டைரக்டர் ஸ்ரீமான் பிரகாஷ் தன் திறன் முழுவதையும் கொண்டு மகத்தான வெற்றியடையலாம் என எதிர்பார்க்கிறார். புது நடிகையாக இருப்பினும் மிகவும் சிறந்த முறையில் உண்மையிலேயே அனுதையைப் போலவே கதாநாயகி நடிக்கிறாளாம். ராதாவின் நடிப்பின் சாமர்த்தியத்துக்குச் சொல்ல வேண்டியதேயில்லை. அடுத்த ஷூட்டிங்கு காமெடியன் ஸ்ரீ. எல். நாராயண ராவ் தாசில்தாராக நடிப்பதுதான். ஓடியன் கம்பெனி அனுதைப்பெண்ணிலிருந்து ரிக்கார்டுகள் வெளியிட ஏற்பாடு செய்துவிட்டது.

---

# டாக்கி விமர்சனம்

---

## அம்பிகாபதி

எல்லிஸ் ஆர். டங்கனின் டைரெக்ஷன் என்றால் அதற்கு ஓர் தனிப் பெருமையுண்டென அவர் ஒவ்வொரு படத்திலும் நிலை நாட்டி வருகிறார். இரண்டு சமூகப் படங்களைத் திறமையுடன் வெற்றிபெறச் செய்ததை விட, இப்போது சரித்திர சம்பந்தமான கதையை அவர் மிகப் பெரிய வெற்றிப் படமாக தமிழ்ப்பட முதலாளிகளுக்கு பெருமை கொண்டு வரும் முறையில் வெளியிட்டிருக்கிறார். இதற்குமுன் பல படங்களில் தோன்றிய நடிகர்கள், இப்படத்தில்தான் தங்கள் முழுத் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்களென்பதைக் காண நாம் சந்தோஷிக்கிறோம். கம்பருக்குத்தான் நடிப்பில் முதல் ஸ்தானம் கொடுக்கவேண்டும். அம்பிகாபதி, அமராவதி, குலோத்துங்கன் யாவரும் மிகத் திறமையுடன் நடித்திருக்கிறார்கள். கதையுடன் கூடவே சேர்த்திருக்கும் ஹாஸ்யத்தை குலோத்துங்கன் ஒட்டு கேட்கும் ஸீனுடன் நிறுத்திக்கொள்ளுதல் நலம். பாட்டுகள் அதிகமாக இருந்தாலும் சிவன் சில அரிய கர்நாடக மெட்டுகளைப் புகுத்தியிருப்பது நன்றாயிருக்கிறது. அரசிளங்குமரியும், அம்பிகாபதியும் முதன் முதல் சந்திக்கும் காட்சி "ரோமியோவும் ஜூலியட்டும்" என்பதை ஒத்திருப்பது டங்கனின் திறனைக் காட்டுகிறது. சோகரஸமான முடிவுடன் படமெடுக்க தமிழ்ப் பட முதலாளிகள் பயப்படுகையில், சேலம் சங்கர் பிலிம்ஸார் துணிந்து எடுத்து, அதிலும் அபரிமிதமான வெற்றி யடைந்திருப்பது தமிழ் நாட்டுக்கே பெருமை யெனலாம். இத்தகைய பெருமையை அடைய தமிழ் டைரெக்டர் முன் வரும் நாள் என்றோ!

## பாலயோகினி (தெலுங்கு)

இது ஏறக்குறைய முன் வந்த தமிழ்ப்படத்தைப்போன்றே இருக்கிறது. ஆனால், இதில் நேரம் அதிகமாவது நன்கு தெரிகின்றது. அதில் வந்த சீதாலக்ஷ்மியம்மாளைப் போல இந்த அத்தைய்யா நடிக்கவில்லை...

கமலகுமாரியின் நடிப்பு பால சரஸ்வதியின் நடிப்பைப்போல அவ்வளவு கவர்ச்சியாயில்லே. ஆனல் ஸரோஜா புதிய பாஷையைக் கற்றுக்கொண்டு இதிலும் வெகு திறமையுடன் நடித்திருப்பதானது போற்றத்தக்கதா யிருக்கிறது. கோபால ராவும் நன்கு நடித்திருக்கிருர். தமிழ்ப் படத்தைப்போன்று, இதுவும் தெலுங்கு தேசத்தில் கட்டாயம் வெற்றி பெறுமென எதிர்பார்க்கிறேம். மோஷன் பிக்சர் ஸ்டுடியோ எடுத்த முதற்படம் திருப்திகரமாயிருப்பதுபற்றி சந்தோஷிக்கிறேம்.

---

# பத்திரிகை விமர்சனம்

---

## விவசாயி

மாதப் பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 1/
ஆசிரியர்: ஸ்ரீமான் அ. கோ. வேணுகோபாலாசாரியார்,
நெ. 1, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

செங்கற்பட்டு ஜில்லா நிலச்சுவான்கள் சங்கத்தின் ஆதரவில் வெளி வரும் இப் பத்திரிகையின் முதல் 3 இதழ்கள் வரப்பெற்றேம். யாவருக் கும் விளங்கும்படியான மிகவும் எளிய நடையில் விவசாயிகளுக்கு அவசிய மான விஷயங்களை எழுதியிருப்பது போற்றத் தக்கது. ஒவ்வொரு விவசாயியும் இதை வாங்கிப் படிப்பதுடன், படிக்கத் தெரியாதவர்களுக்கு விஷயத்தைக் கூறி கிராம புனருத்தாரணத்துக்கு வேண்டிய உதவி புரியுமாறு பொதுஜன அபிப்பிராயத்தை உருவப்படுத்த வேண்டும். தற்கால நாகரிகத்தினலேற்பட்டுள்ள பலவித சாதனங்களையும் நமது விவ சாயிகள் எப்படி உபயோகிக்கலாமென்பதைப் பற்றிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இதில் வெளி வருமென்று எதிர்பார்க்கிறேம்.

## தமிழ்—ஸம்ஸ்க்ருத அகராதி

ஸ்ரீமான் நே. ஈ. வெங்கடேச சர்மா (24, ஸ்டேஷன் ரோட், வில்லிவாக்கம்.) எழுதியது. விலை ரூ. 1/4.

ஒரு தமிழ் பதத்திற்கு எத்தனை வித அர்த்தங்கள் வடமொழியிலிருக் கிறதோ, அத்தனையும் இதில் தந்திருக்கிருர் இதன் ஆசிரியர். இம்மாதிரி புத்தகங்கள், மிகவும் எளிய நடையில் சுலபமாகக் கற்றுக் கொள்ளக் கூடிய வகையில், கிடைப்பது அரிது. இதனைத் தந்துள்ள ஆசிரியருக்கு, இந்த பிரதிகளை வாங்கிப் படிப்பதே இதற்குத் தகுந்த கைம்மாருகவிருக் கும். இதேமாதிரி இன்னும் அநேக நூல்களை வெளிப்படுத்த இவ்வாசிரியர் முன்வர வேண்டும்.

# பாரதியாரும்—திருப்பள்ளியெழுச்சியும்

இதே கவிச் சக்ரவர்த்தியான பாரதியாரை உலகம் அறியாத காலமும் இருந்தது. அறிந்தும் அறியாத காலமும் இடையில் கடந்தது. ஆனால் இன்று பாரதியை தமிழர் பூராவும் அறிந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. பாரதியைப்பற்றி அவ்வப்போது பத்திரிகைகளில் பல அறிஞர்கள் எழுதி வருகிறதை நாம் காண்கிறோம். அவ்வாறு எழுதப்படும் சகல விஷயங்களும் பாரதியாரை நேருக்கு நேராக அறிந்தவர்களின் மூலமாகவே வெளியாகிறதென்று கூற முடியாது. சில நேரில் அறிந்ததாக இருக்கலாம்; மற்றும் சில அறிந்தவர்களின் மூலம் கேட்டதை வைத்து கயிறு திரித்ததாக இருக்கலாம். பின்னும் சில பாரதியின் காலத்தில் பத்திரிகைகள் தெரிவித்த விஷயங்கள் அகஸ்மாத்தாகக் கிடைத்து அவற்றைக் கொண்டு வெளிவந்ததாக இருக்கலாம். இப்படி பாரதியாரின் புகழை தமிழ் நாடு அறியும்படிச் செய்ததும் ஓர் பெரும் பாக்யமாகும்.

ஆனால், எந்த விஷயத்தையும் அவரவர்கள் நேரில் அறிந்து கண்டு அனுபவித்துக் கூறுவதுபோல் மற்றது ருசிக்காது. சென்ற ஆண்டு பாரதி தினக் கொண்டாட்டத்தின்போது லோகோபகாரியில் ஸ்ரீமான் நெல்லையப்பர், பாரதியின் அத்யந்த ப்ரியர்களில் ஒருவரான ஸ்ரீமான் குவளை கிருஷ்ணமாச்சாரியாரைப் பற்றி எழுதி இருந்ததைப் பலர் படித்திருக்கலாம். அதைப் படிக்கும் வரையில் நானும் மேற்படியாரை எங்கள் பார்த்தஸாரதிப் பெருமாள் கோயிலில் சேவை செய்துலாவும் ஒரு பக்தர் என்று மட்டும் நினைத்திருந்தேன்.

அதைப் படித்த பிறகு அவரை நான் என் வீட்டிற்கழைத்து அவரிடம் சுமார் மூன்று மணி நேரம் பேசியபோது எனக்குண்டாகிய வியப்பிற்கும் சந்தோஷத்திற்கும் எல்லையே இல்லை. கண்ணனை மகனு யடைந்த யசோதை கண்ணனின் உள்ளத்தை முற்றுமறிந்து, தன்னையே அவருக்கு அர்ப்பணம் செய்து எப்படி பக்தியில் லயித்தாளோ, அதே போல் பாரதியாரின் அறிவிலும், ஆவேசத்திலும், சுதேச உணர்ச்சியிலும், கவிப் பெருக்கிலும் அவர் லயித்திருந்த ஒரு தன்மையை பல்லாண்டுகள் கடந்த பின்னும் பாரதியாரைப் பற்றிப் பேசுகையில் அவரது கண்கள் மடை திறந்ததுபோல் கண்ணீர் பெருகத் துக்கம் தொண்டையை அடைக்க பேசமாட்டாது பேசியதிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

அவர் தற்கால நாகரிக உலகில் சேர்ந்தவரல்ல. பக்கா வைதீகப் பிச்சு; கோயிலே சதா கதியாக விருந்து அழுக்கு உடையும், பட்டை நாமமுமாக விளங்கும் ஒருவரை யார்தான் பாரதியின் நிழல் போன்றவர் என்று நினைக்க முடியும்? அவரிடம் விஷயத்தைக் கேட்க வாரம்பித்ததும் புத்திலிருந்து ஈசல் கிளம்புவதுபோல், அவரும் பாரதியாரும் ஆதியில் இருந்த சினேகத் தன்மையின் வைபவங்களும், அக் காலே நடந்த பல அரிய சம்பவங்களும் கிளம்பின.

அந்த விஷயங்களை அவரையே ஒவ்வொரு கட்டுரையாக எழுதித் தரும்படி நான் கேட்டதற்கு அவர் தியங்கினர். "எனக்கு அது முடியாது; சொல்லி விடுகிறேன்; நீங்களே எழுதுங்கள்" என்று கூறிவிட்டார். அதனல் அவருக்கு படிக்கத் தெரியாது என்று நினைக்க வேண்டாம். ஸம்ஸ்க்ருதம், தமிழ், இங்கிலீஷ், ப்ரெஞ்சு முதலிய பல பாஷைகள் நன்ருகத் தெரியும். ஆனல் பழக்கம் விட்டுப்போன காரணமாக இருக்கலாம்.

அவர் பாரதியாரைப்பற்றி கூறிய விஷயங்களில் இது பரியந்தம் வெளி வராத ஸாரங்களை நமது 'மோகினி'யில் அவ்வப்போது வெளியிட உத்தேசித்திருக்கிருேம். இம்மலரில் பாரதியார் "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்ற திருப்பள்ளியெழுச்சி பாடியதற்குக் காரணத்தை விளக்குகிறேன்.

பாரதியார் புதுச்சேரியிலிருந்த காலத்தில் அவரை ஆங்கில அரசாங்கத்து ரகஸ்யப் போலீஸ் சுற்றிக்கொண்டே இருக்குமாம். அதனல் அவருடைய ப்ரபாவத்தை அறிந்த நண்பர்களும், மிகவும் நெருங்கிப் பழகப் பயந்து சற்று விலகியே இருப்பார்களாம். ஆயினும் துணிபுடன் நெருங்கிப் பழகும் நண்பர்களும் இல்லாமலில்லை. அத்தகையவர்களில் ஸ்ரீமான் கு. கி. முதல் ஸ்தானம் பெற்றவராய் விளங்கிருராம். காரணம், அவரிடம் பாரதியாருக்கு இருந்த கரை காணுத அன்பு ஒன்று. அவ்வூர் வாசியாகையால் அவர் ஊரைப்பற்றி நன்கறிந்தவர் என்ற அபிமானம் ஒன்று. இவைகளைவிடப் பெரியதும் முக்யமானதும் யாதெனில், அவர் நன்ருகப் படித்தவர். அந்த ப்ரஞ்சு எல்லையிலோ, ப்ரிட்டிஷ் எல்லையிலோ உத்யோகம் வகிக்கும் சந்தர்ப்பமிருந்தும் அதை த்ருணமாக மதித்து, பாரதியின் அறிவு ஜோதியை நிழல்போலிருந்து சுவைப்பதையே பேரானந்தமாகக் கொண்டு உண்மை அன்புடன் இருந்த தன்மையே யாகும்.

அத்தகைய நண்பருடன் உரையாடுவதையும், தாம் பாடியதை அவரைக் கொண்டு எழுதச் செய்வதையும் பாரதியார் வெகு சந்தோஷமாகக் கொண்டாராம். பாரதியார் தினம் விடியும் முன்னர் அவ்வூரிலுள்ள மடுவிற்கு ஸ்நானத்திற்காகச் செல்கையில் வழியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்று அழைத்துப் போவாராம். அவரும் பாரதியார் வரும் நேரத்திற்கு முன்பே வீதியில் காத்திருப்பாராம்.

ஒரு தினம் பாரதியார் வரும்போது அவர் அயர்ந்து தூங்கி விட்டதால் வீதியில் இல்லாது, கதவு தாளிடப்பட்டிருந்தது. பாரதி கதவை இடித்து "இன்னும் உறக்கமோ! கிருஷ்ணு! எழுந்திரு" என்ருராம். அவரது தாயார் கதவைத் திறந்தார். அவர் அலறி எழுந்து வந்தாராம். அவரது தாயார் "இவர் யார்?" என்று கேட்டதற்கு "நான் சொல்லும் கவி பாரதி இவர்தான்" என்று தன் தாயாருக்கு அறிமுகம் செய்து வைத்தாராம்.

அதற்கு அந்த அம்மாள் "இவர்தானு பாரதி! ரொம்ப சந்தோஷம். அப்படியானுல் இப்போது விடியற்காலமாயிற்றே? சுப்ரபாதம் ஒன்று பாடச் சொல்லு." என்று கேட்டாளாம். அதைக் கேட்ட பாரதி "அப்படி என்ருல் என்ன கிருஷ்ணு?" என்ருராம். அவர் பயபக்தியுடன் "சுப்ரபாதம் என்ருல் பகவானை காலையில் துயிலெழுப்புவது. அதற்கு தாய்மொழியில் திருப்பள்ளியெழுச்சி என்று கூறுவார்கள்." என்ருராம்.

உடனே அவர் தாயார் "சுப்ரபாதம் தெரியாத கவியா பாரதி! **கதிரவன் குணதிசை** என்று ஆழ்வார் கூடப் பாடி இருக்கிருரே" என்று ஒரு மாதிரியாகக் கூறினுளாம். பாரதி அதற்குப் பதில் கூருமல் ஸ்நானத்திற்குப் போய் விட்டாராம். மறு நாள் அதி காலையில் பாரதி வழக்கம்போல் வரும்போது கு. கி. தயாராக இருந்தாராம். பாரதி "கிருஷ்ணு! அம்மாவைக் கூப்பிடு. இன்று திருப்பள்ளியெழுச்சி பாடிவிட்டு மடுவுக்குப் போவோம்" என்ருராம். அவர் இதைக் கேட்டு வியப்புற்று தன் தாயாரைக் கூப்பிட்டாராம். பாரதி உத்ஸாகத்துடன் பாரதமாதாவின் திருப்பள்ளியெழுச்சியைப் பாடிக் காட்டினுராம். கு.கி.யின் தாயார் மெய்மறந்து ஆநந்தமடைந்து "பாரதீ! நீயே உண்மைக் கவி. உனக்கு பகவான் தீர்க்காயுசைக் கொடுப்பாராக. அதான் உன்னிடம் ஜனங்கள் இத்தனை ப்ரியத்துடன் சுற்றுகிருர்கள்." என்ருளாம். பாரதியும் பணிவுடன் அந்தம்மாளுக்கு வந்தனம் செலுத்தி "தாயே! விளக்குக்கும் ஒரு தூண்டுகோல் அவச்யம். அதுபோல் இந்த திருப்பள்ளியெழுச்சிக்கு பராசக்தி உங்களைத் தூண்டுகோலாய் அமைத்தாள்போலும்." என்று கூறி விட்டுச் சகாவுடன் கிளம்பினுராம்.

மேற்படி விஷயத்தைச் சொல்லி முடித்த ஸ்ரீமான் கு. கி. "அம்மா! அக் காலையில் என்னுள்ளம் மகிழ்ந்தது ஒரு மாதிரியாக இருந்தது. இப்போது அந்த சம்பவத்தை நினைக்கும்போது என்னிதயம் பூரிக்கிறது. அத்தகைய பாரதியின் அன்பிற்குப் பாத்திரனு யிருந்ததை எண்ணி கர்வங் கூட அடையலாம்போலிருக்கிறது." என்று கண்ணீருடன் கூறினுர்.

அடுத்த இதழில் இன்னும் அற்புதமான விஷயத்தை எதிர்பாருங்கள்.

—(வை. மு. கோ.)

---

**தயவு செய்து**

**உங்களது சந்தா நம்பரை**

**எழுதத் தவருதீர்கள்.**

---

# எனது நன்றியறிதல்

—(o)—

அறிவிற் சிறந்த சகோதர சகோதரிகளே !

ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமானின் ஜாயமான கருணையினலும், மோகினிச் செல்வியின் அன்பர்களாகிய உங்களது இணையற்ற பேருதவியினலும் மோகினிக்கு 14 ஆண்டுகள் சந்தோஷத்துடன் கடந்து, 15-வதாண்டு குதூகலத்துடன் பிறந்துவிட்டது. இன்ப மயமான கல்யாண கோர்ட்டு திறக்கும் மங்களகரமான புது வருடம் தை மாதம் பொங்கல் பண்டிகையுடன் பிறக்கப் போகின்றது.

புது வருடத்தில் நம்மெல்லோர் வீட்டினும் பால் பொங்கவும் சந்தோஷம் பொங்கவும், திடகாத்திர ஆரோக்யாதி ஐச்வர்யம் பொங்கவும், தேச க்ஷேமம் பொங்கவும், எல்லாம் வல்ல இறைவன் —ஆண்டவன்—அருள் புரிந்து காக்கும்படி அவனடி தொழுது வேண்டுகிறேன்.

நாம் சென்ற இதழில் தெரிவித்தபடியே இவ்வருடத்திற்கு ஓர் புதிய சிறிய நாவல் "உளுந்த இதயம்" என்பது வெளி யாகிவிட்டது. ஏற்கெனவே பல நண்பர்கள் புது வருட (**1938**-வது வருட) சந்தாவையும், புதுப் புத்தகத்திற்கும் சேர்த்து அனுப்பி பேருதவியை மோகினிக்கு அளித்துவிட்டார்கள். அவர் களுக்கு எனது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, மற்ற நேயர்களையும் அதேபோல் உதவி புரிந்து ஆதரிக் கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். மோகினியின் அன்பர்கள் தம் தம் சிநேகிதர்களையும், உறவினர்களையும் சேர்த்துக்கொடுத்து மோகினியின் சக்தியை இன்னும் பலப்படுத்தி ஆதரிக்கும்படியும் வணக்கத்துடன் பிரார்த்திக்கின்றேன்.

வழக்கம்போல இம் முதல் சஞ்சிகை எல்லோருக்கும் வந்து விடும். இரண்டாவது சஞ்சிகை சந்தா செலுத்தியவர்களுக்கு மட்டும் தான் வரும் என்பதை தாழ்மையுடன் ஞாபக மூட்டுகின்றேன்.

தங்கள் நன்றியுள்ள
சகோதரி
வை. மு. கோதைநாயகி.

1938 ஸு ஜனவரி மீ 31-ம் தேதி வரையில்தான்

## தனிப் பரிசு

### பழைய சந்தா நேயர்கள் கவனிக்கவும்

11-வதாண்டு முதல் சேர்ந்தார்ப்போல சந்தா நேயர்களாயிருந்து, 15-வதாண்டின் சந்தாவை 1937 டிசம்பர் 20-ம் தேதிக்குள் அனுப்பினால் ரூ. 2 பெறுமான நாவல்கள் இனமாக கொடுக்கப்படுமென்று, சென்ற 11-12 இதழ்களில் தெரிவித்திருந்தபடி அநேகர் புது வருஷ சந்தாவை அனுப்பி, இனம் நாவல்களைப் பெற்றுக் கொண்டு விட்டனர். மற்றும் சிலர், புது வருஷ சந்தாவை ஜனவரிக்குள் அனுப்புவதாகவும், அதுவரையில் மேற்படி தனிப் பரிசுக்கான கால நிபந்தனையை ஒத்தி வைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்வதால், அப்படியே ஜனவரி முடிவுக்குள் சந்தாவையும், தபாற் செலவுக்காக அணு 4-ம் அனுப்பலாமென்பதை தெரிவிக்கிறோம்.

குறிப்பு :—10-வதாண்டிலிருந்து 14-வதாண்டு வரையில் சந்தா செலுத்தியதற்காக ஏற்கெனவே இனம் நாவல்கள் பெற்றவர்களும், 11-வதாண்டுக்குப் பிறகு சந்தா நேயர்களாகச் சேர்ந்து மேற்கண்ட பரிசுக்கு வேண்டிய உரிமையைப் பெறாதவர்களும், பலர் புது வருஷ சந்தாவுடன் 4 அணு சேர்த்தனுப்பிவிட்டு இனம் நாவல் வேண்டுமென எழுதுகிறார்கள். அவர்கள் அனுப்பிய நாலணுவுக்கு புதிதாக வெளிவந்த ஊதத இதயம் எனும் நாவலை அனுப்புகிறோம்.

## 15-வதாண்டுப் பரிசுகளின் விவரம்

1937-ம் டிசம்பர் மீ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1. | 20 | G. 136 | ஸ்ரீ. எஸ். கோவிந்தஸாமி, ஸாங்கி. |
| 2. | 15 | A. 268 | ,, எ. அப்துல் காதர், சோலான். |
| 3. | 10 | G. 141 | ,, டி. கே. கோபாலன், வேலூர். (சேலம்) |
| 4. | 5 | R. 228 | ஸ்ரீமதி. ருக்மிணி அம்மாள், போலாரம். |
| 5. | 5 | C. 125 | ,, சந்திராபாய், சௌகார்பேட்டை சென்னை. |
| 6. | 5 | S. 743 | ஸ்ரீ. எஸ். கே. சுப்பைய்யா ரெட்டியார், கொழும்பு, |

## பிப்ரவரி மீ 20 தேதிக்குள்

சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களை குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு கீழ்க்கண்ட தொகையுள்ள புத்தகங்கள் பரிசாக கொடுக்கப்படும்.

| ரூ. 15 | ரூ. 10/-ல் | ரூ. 5/-ல் |
|---|---|---|
| முதற் பரிசு | இரண்டு பரிசுகள் | மூன்று பரிசுகள் |

# 1938-ம்
# வருஷத்தின்
# மஹோன்னத படம்!

புது வருஷத்தின் நறுமலர்களில்
மனோஹரமான வாசனையுடன் கூடியது.

# "பக்த மீரா"

ஓய். எச். ராவின் உயரிய நடிப்பு!

ஓய். வி. ராவின் டைரக்ஷன்!

*

வசுந்தராதேவியின் பரிமள கீதம்!

## சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட்,

116, ராயப்பேட்டை ஹைரோடு,

சென்னை.

போன்: 8331.

தந்தி: காமதேனு.

தயாராகிவிட்டது ! தயாராகிவிட்டது !

# துகாராம்

| தெலுங்கு | தமிழ் |
|---|---|
| சி. எஸ். ஆர். ஆஞ்சநேயலு | முசிரி சுப்ரமண்ய ஐயர் |
| சுரபி கமலாபாய் | கே. சீதா, பாலஸரஸ்வதி |
| பாலஸரஸ்வதி | கே. சாரங்கபாணி |
| | காமெடியன் எம். எஸ். முருகேசம் |
| முதலிய பிரபல நடிகர்கள் நடித்தது | முதலிய பிரபல நடிகர்கள் நடித்தது |

உங்கள் ஊர் தியேட்டருக்கு வரும் நன்னாளை எதிர்பாருங்கள்

எமது அடுத்த மகத்தான தயாரிப்பு

**ரம்பை கர்வ பங்கம்** அல்லது **யத்பவ்ஷயன்**

**ஸென்ட்ரல் ஸ்டூடியோஸ், கோவை.**

ஸ்ரீ

# வாழ்க்கையின் நாதம்

## அல்லது வானக்குயில்



### 1

"உலகத்தையே மயக்கும் நேரங்களில் அந்தி நேரம் ஓர் தனி மகிமை பெற்றதல்லவா? மாலைப் பொழுது சூரியன் உஷ்ணம் தணிந்து சாந்த ரூபமாய் மேற்கு நோக்கிச் சென்று விட்டான். சிலு சிலுப்பான காற்றும், மனோரம்யமான அந்தி வேளையின் அழகும்

எல்லோரையும் பரவசமுறச் செய்கின்றன. 5 மணி டாங் டாங் கென்று அடித்ததும் குழந்தைகளின் சொல்ல முடியாத குதூகலமும், கொக்கரிப்பும் ஆரவாரமும் கூறத் திறமே இல்லை. கூண்டி விருந்து விடுபட்ட பறவைகளைப்போல் சுயேச்சையாய் பலகையும் புத்தகமுமாக பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வரும் ஆநந்தக் காட்சியை தினம் பார்க்கும் எனக்கே திகட்டவில்லை. என்ன குதூகலம் பார்த்தீரா?" என்று ஒரு உபாத்தியாயர் மற்றொரு உபாத்தியாயரை நோக்கிக் கேட்டார்.

அதற்கு அவர் "இந்த ஆனந்தகரமான காட்சியைக் கண்டு களித்துச் செல்வதற்காகத் தான் நான் தினம் சற்று நேரம் தங்கி போகிறேன்." என்றார்.

கார்த்திகைப் பண்டிகையின் பட்டாசின் பேரொலி ஆங் காங்கே ஆரம்பித்து விட்டது. பள்ளிக்கூடம் விட்டவுடன் குழந் தைகள் கூட்டங் கூட்டமாக வெளியில் வரும்போதே அவர்களது இதயத்தின் ஆவல் வேகம் பட்டாசைப் பற்றிப் பேசவும், பட்டாசு கடையை நோக்கவுமே பறந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தின் எதிர் வீட்டு வாசலில் பட்டாசுக் கடை வைத்திருப்பதைக் கண்ட பிள்ளைகளும் பெண்களும், அந்த கடைப் பக்கம் அவர்களை அறியாது ஆசை இழுத்துச் செல்ல அதன் முன்பு கூடி விட்டார்கள்.

அப்போது தலை நனையும்படி சிறு தூறல் தூறுவதால் சில பணக்காரப் பிள்ளைகள் வண்டியில் போய் விட்டார்கள். சிலர் குடை பிடித்துச் சென்றார்கள். சிலர் சவுக்கத்தைத் தலைமீது போட்டுக் கொண்டு சென்றார்கள். சிலர் பலகையைத் தலைமீது வைத்துச் சென்றார்கள். அந்த மழையிலும் அவர்களுடைய கவனத்தை பட்டாசுக் கடை இழுத்ததே யன்றி அவர்கள் மழை யைப் பொருட்படுத்தவில்லை.

அந்த கூட்டத்தில் இளம் சிறுமி யொருத்தியும், சிறுவன் ஒருவனும் சாதாரண ஆடையுடன் கிழிந்த புத்தகமும், ஒரு பலகை யும் தலைமேல் மழைக்குப் பிடித்துக் கொண்டு மற்ற குழந்தை களுடன் பட்டாசுக் கடையின் முன்பு வெகு ஆவலுடன் நின்

ளூர்கள். அங்குக் கூடியுள்ள மற்ற பெண்களும், பிள்ளைகளும் ஒருவரை யொருவர் பார்த்து பேசத் தொடங்கினுர்கள்.

ஒரு பெண் :—எங்காத்துலெ எங்கப்பா நெரய பட்டாசு வாங்கிண்டு வந்திருக்கா!....ஒங்காத்துலெ?

வேறு :—ஓ! எங்கப்பாகூட வாங்கிண்டு வந்துட்டா. இவாப்பா இன்னிக்குதான் வாங்கிண்டு வரப் போருராம்.

மற்ருெரு :—ஏண்டீ வாஸந்திகா! ஒங்கப்பா வாங்கிட்டாரா! எத்தனெ பொட்டளம் பட்டாசு, மத்தாப்பு எல்லாம் வாங்கிருக்கு?

வாஸ :—(முகத்தில் விசனமும், ஆவலும் ஜ்வலிக்க) எங்கப்பா இன்னும் வாங்கலெம்மா! இனிமேதான் வாங்கித் தருவா.

ரங்கராஜு :—அக்கா! அப்பா வாங்கித்தரேன்னு சொன்னுளா?

வாஸ :—பேசாமெ இரு ராஜு! நாம்ப ஆத்துக்குப் போயி அப்பாவெ கேக்கலாம். இவாகிட்டெ அப்படிதான் சொல்லணும்.

கடைக்காரன் :—தே!....ஏ பசங்களா! கடெயெ மறச்சுண்டு இதென்ன கும்பல்? தம்பிடிக்கு வ்யாபார மில்லாமே வீண் சத்தம் போட்றீங்களா! போங்க. போங்க. வாங்க வரவாளுக்கு வழி விடுங்க.

இந்த கூச்சலைக் கேட்டவுடனே சில பசங்கள் பயந்து கொண்டு ஓடி விட்டார்கள். சுபாவத்திலேயே மிகவும் பயந்தவர்களான வாஸந்திகாவும் ரங்கராஜுவும் பயந்து கொண்டு கடையை விட்டு வெளியே வந்தார்கள். அங்காங்கே பட்டாசு வெடிக்கும் சப்தத்தைக் கேட்டு அதிலேயே மனம் லயித்து, ஏக்கத்துடன் வீதியில் நின்று நின்று அவைகளைப் பார்த்துக் கொண்டே நடந்தார்கள். அதற்குள் இவர்களுடைய வீடும் வந்து விட்டதால் வீட்டுப்படி ஏறினுர்கள்.

அப்போது பக்கத்து வீட்டுத் திண்ணையில் அவ்வீட்டு எஜமானரான கிழவர் தமது பேரன் பேத்திகளை உட்கார வைத்துக் கொண்டு பட்டாசு சுட்டு வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட வாஸந்திகாவும், ரங்கராஜுவும்

திண்ணைமேல் உட்கார்ந்து வேடிக்கை பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

**தா**ம் பட்டாசு விடுவதைப் பார்த்து இவர்கள் சந்தோஷிப்பதைக் கண்டு சகியாது பொருமை கொண்ட அந்த குழந்தைகள் இவர்களை விரைக்க விரைக்கப் பார்த்தார்கள். இந்த களங்க மற்ற தூய்மையான குழந்தைகளுக்கு அது ஒன்றும் புரியவில்லையாதலால் அங்கேயே உட்கார்ந்து பக்கத்து வீட்டுப் பெண்ணையும், கிழவரையும் ஆவலோடு நோக்கி,

வாஸ :—தாதா! நாங்களும் அங்கே வந்து பட்டாசு சுடட்டுமா? சிவகாமி! நானும் வரட்டுமாடீ?....

சிவகா :—நாங்க ஏன் குடுப்போம்? ஒங்கப்பாவெ வாங்கி குடுக்கச் சொல்லு. பிச்சை வாங்கி பட்டாசு சுட வெக்கமில்லாமெ வரயெ?....

கிழவர் :—தெ குட்டி! பேசாமெ இரு. இதோ ஒரு நிமிஷம் அவாளெ வெறட்டி புட்ரேன் பாரு.....

**எ**ன்று கூறிக்கொண்டே ஒரு பட்டாசைக் கொளுத்தி ராஜூ, வாஸந்திகா உட்கார்ந்திருந்த இடத்தில் கொஞ்சமும் ஈவிரக்க மற்றுப் போட்டுவிட்டு, குழந்தைகளோடு கடகடவென்று சிரித்தார். என்னே அக்ரம நெஞ்சின் அழுத்தம்! பராக்காக பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த குழந்தைகளின் பக்கம் பட்டாசை எறிந்ததும், குழந்தைகள் மிரண்டு, நடு நடுங்கிப் போய் உருட்டியடித்துக் கொண்டு, க்ரீச் சென்று கூவியவாறு எழுந்து ஓட்டம் பிடித்தார்கள். இதற்குள் பட்டாசும் டபீரென்று வெடித்தது. அந்த வெடியின் ஒலிக்குமேல் கிழவரின் நகைப்பும், குழந்தைகளின் நகைப்பும் சப்தித்தன என்ருல் அவர்களின் மனோ நிலைமையைக் கூற வேண்டுமா?

## 2

மக்கள் பலராலும் கௌரவிக்கப் படுவதும், பூஜிக்கப் படுவதும் அவர்களின் உத்தமமான நல்லொழுக்கத்தினாலும், நன்னடத்தையினாலுமே யன்றி வேறினாலில்லை. அவ்வூரில் 'மகா சாது, மகா யோக்யன்' என்று தையல்கார திருமூர்த்தியைப் போற்றாதோர் கிடையாது. திருமூர்த்தியின் வம்சம் வெகு மேன்மையான பரம்பரையைச் சார்ந்ததாகும். அவனது பிதா தமக்கிருக்கும் சொல்ப நிலங்களில் உழுது வயிறார உண்டு காலந் தள்ளி வந்தார்.

ஆனால் யார் விதி யாரை விடுகிறது? பஞ்ச காலத்தின் தாண்டவம் ஆரம்பித்த உடனே பயிர்களை யழிக்கும் பூச்சிகள் பயிர்களில் நிரம்பி விட்டதால் விளைவுக்குப் பஞ்சம் ஏற்பட்டுச் சாப்பாட்டுக்கும், வரிப்பணம் செலுத்துவதற்குமே வெகு கஷ்டமாகி விட்டது. இந்நிலைமையில் சில வருஷங்கள் பலவித கஷ்டப்பட்டு முயற்சிகள் செய்தும் பலனற்றதாகி விட்டதால் அந்த கிராமத்து ஜனங்களே பிழைப்பை நோக்கி வேறு நகரங்களுக்கு ஓடவாரம்பித்தார்கள். அவர்களோடு திருமூர்த்தியின் தாய் தகப்பனாரும் சிறுவனாகிய திருமூர்த்தியுடன் ஓடி வந்தார்கள். அங்கும் பிழைப்பதற்கான சாதனங்கள் ஒன்றுமே கிடைக்கவில்லை.

படிப்போ ஒன்றுமே தெரியாது. இந்நிலைமையில் ஒரு தையற்கார சாயபு இவருக்கு சிநேகமாகி, இவரைக் கடையில் வைத்துக் கொண்டு தையல் வேலை கற்றுக் கொடுத்து கால் வயிறு கஞ்சி வார்த்து வந்தான். நாளடைவில் அவர் நன்றாக சகல வித வெட்டுக்களும் தாமே வெட்டித் தைக்கும் சாமர்த்தியம் பெற்று விட்டார். சில வருடங்கள் சாயபுவின் கடையிலேயே ப்ரதான தையல்கார வேலை செய்து வந்தார்.

சாயபு காலமாகிவிட்ட பின்னர் அவரே தனிமையில் தையல் கடையொன்று வைத்து, அதில் தன் மகனுக்கும் ஆதி முதல் இதையே கற்றுக் கொடுத்து வந்தார். அத்தொழில் கால க்ரமத்

தில் இவர்களுக்குப் போதிய ஆதரவும், லாபமும் கூடக் கொடுத்து வந்தது. திருமூர்த்தி சிறு பிராயம் முதலே கை தேர்ந்த தையல்காரனாகி விட்டான்.

திருமூர்த்திக்கு ஏற்ற நிழல் போன்ற திருவேணி என்ற வனிதாமணியை விவாகம் செய்வித்தார்கள். அவனை, க்ருக தர்மத்திலும் ஒற்றுமை மிகுந்த தம்பதிகள் என்ற புகழ் தேவி ஸ்வீகரித்தாள். அவனுடைய பிதா காலமாகிய பின்னர், தன் பிதா நடத்திய தொழிலைச் சற்றும் சளைக்க விடாமல் நடத்தி வந்தான். வெகு விரைவிலேயே இரு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டான்.

எந்த காலத்திலும், எந்த ஒரு தனிப்பட்டத் தொழிலும் அதற்குப் போட்டி இல்லாமல் நடந்ததே இல்லை. எத்தகைய காரியமாயினும், தொழிலாயினும் அதற்குப் போட்டியும், எதிரிகளின் பொருமையும், அதனால் நஷ்டமும், துன்பமும் ஏற்படுவது சகஜமாகிவிட்டது. திருமூர்த்தி மற்ற சில தையற்காரர்களைப் போல ஊரில் இருக்கும் துணிகளை எல்லாம் வாங்கிக்கொண்டு "இதோ தைத்துக் கொடுத்து விடுகிறேன்; நாளைக்குக் கொடுக்கிறேன்" என்று கூறி, குறித்த நேரத்தில் கொடுக்காமல் ஏமாற்றியும், ரவிக்கை, ஜாக்கெட்டு, சொக்காய், கவுன், பாவாடை முதலியவைகளைச் சரியாய் வெட்டி அளவுபடி அழகாய் தைக்காமலும், துணிகளைத் திருடிக் கொண்டும், நலுக்கியும், அழுக்காக்கியும், கவனியாது அலக்ஷியமாகப் போட்டும், சில சமயம் எலியும் கடிக்கும்படி வைத்தும் இதுபோல் ஒழுங்கற்ற முறையில் ஒரு நாளும் நடக்கவே மாட்டான்.

தன்னால் சாத்யமான வரையில்தான் துணிகளை வாங்குவான். குறித்த தவணை தவருது தைத்துக் கொடுப்பான். இதனால் திருமூர்த்தி யோக்யமானவன் என்ற பொதுஜன வாக்கையும், ஆதரவையும் பெற்றுவிட்டான். இவனைப்போல் இதே தொழில் செய்யும் இரு தொழிலாளிகள் தமது குற்றத்தையும், ஒழுங்கற்ற வேலை முறையையும் அடியோடு மறந்துபோய், திருமூர்த்தியினால் தான் தமக்குத் தொழில் சரியாக நடக்காமல் நஷ்டம் வந்துவிட்டதென்ற ஓர் எண்ணம் உண்டாகி, அவன்மீது கோபமும், ஆத்திரமும் கொண்டார்கள்.

"எனக்கு இரு கண்களும் போனாலும் பாதகமில்லை; பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரு கண்ணாவது போய்விட்டால் போதும்" என்று ஒரு புண்ணியவான் நினைத்ததாகப் பழமொழியுண்டு. அதே போல் அந்த தையற்காரர்களும், இன்னும் சில தையற்காரர்களுடன் கூட்டம் போட்டுப் பேசி ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள்.

அதாவது,—ஒவ்வொரு துணிக்கும் கூலியைக் குறைத்துவிடுவது. தனியாக ஸ்பெஷல் ஆட்களை வைத்து வீடு வீடாகச் சென்று துணிகளை வலுவில் வாங்கி தைத்துக் கொடுப்பது. சில ஏழைகளுக்கு துணியும் தாமே கை விட்டு வாங்கிக் கொடுத்து நாளடைவில் பணம் வாங்கிக் கொள்வது, தடபுடல் ப்ரசாரம் செய்வது என்று ஆரம்பித்தார்கள்.

இதற்கு ஏற்றாற்போல் நாகரிகமும், தினே தினே விருத்தியாகிக்கொண்டே வருவதன் மூலம் ஒவ்வொரு பெரிய மனிதரின் வீட்டிலும் கை மிஷினும், கால் மிஷினுமாக தையல் மிஷின்கள் வாங்கி, சீமாட்டிகளே தமக்கு வேண்டியவற்றைத் தைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

மேற்கண்ட போட்டியும், வீட்டுத் தையல்களும் ஒன்று சேர்ந்து வெகு விரைவிலேயே திருமூர்த்தியைத் தாக்கியதால் அவனது தொழில் குன்றி வருவாயே இல்லாமல் கேவலமான நிலைமைக்கு வந்து விட்டது. "எல்லாம் சோதனைக் காலம். கடவுளின் திருவுள்ளமிது" என்று தம்பதிகள் மனந் தேறுவார்களே யன்றி அப்போதும் அவர்களது விரோதிகளின்மீது பகையோ, கோபமோ கொள்ளாது, தம் தலை விதி என்றே எண்ணித் துணிந்தார்கள்.

திருமூர்த்தி மகா மானியாகையால் தானாக வலுவில் சென்று பல்லிளித்துக் கெஞ்சிக் கூத்தாடி, கூழைக் கும்பிடு போட்டு கள்ளப் பேச்சு பேசி அட்டகாஸம் செய்யும் மனிதனல்ல. தன்னை நம்பி மதித்து யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு பழய ஒழுங்கு மாறாது தைத்துக் கொடுப்பான். சில சமயம் தையல் மெஷினுக்கு வேலையே இல்லாமல் சும்மா தூங்கும்; அந்நிலையில் அதைப்

பார்க்கும்போது திருமூர்த்தியின் மனம் மிகவும் வருந்தும். தன் குழந்தைகளை விட அதிகமான பாசத்துடன் அந்த தையல் மெஷினை அவன் நேசித்து வந்தான்.

மெஷின் வேலை செய்யும்போது உண்டாகும் ஓசையை அவன் ஓர் உயர்ந்த சங்கீத நாதம்போல் எண்ணிப் பூரிப்பான். அதையே அவன் வாழ்க்கையின் ஜீவநாதமாகவும் நினைப்பான். இம்மாதிரி நிலைமையில் தொழில் க்ஷீணமடைந்து மாதா மாதம் சாப்பாட்டிற்கும், வீட்டு வாடகைக்கும், குழந்தைகளின் போஷணைக்கும் கூட வருவாய் காணுமல் கஷ்ட நிசையே தலை தூக்கித் தாண்டவமாடத் தொடங்கியது. சுகஜீவியாக இருந்த காலம் மறைந்து கஷ்ட ஜீவனத்தில் ப்ரவேசித்தார்கள். மூர்த்தியின் தாயார் தன் மகனுக்குச் சம்பவித்த போட்டி நஷ்டத்தைக் கண்டு மனமுருகினுள். ஆனுல் அவள் தள்ளாத கிழவி என்ன செய்ய முடியும்?

தையலுக்கென ஓர் தனி விடுதியை வைத்திருந்தது போய் ஒரே அறையில் தையலும், குடும்பமும் நடக்கும் நிலைமைக்கு வந்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையில் சுழன்றுழலும் பலர் தையல் கடைகளை வைத்து விட்டார்கள். பல குடும்பப் பெண்மணிகள் தனியாகத் தையல் கடை வைத்து பெண்களுக்குப் பெண்கள் தைத்துக் கொடுப்பதாக ப்ரசாரம் செய்து வந்தார்கள். எல்லாம் சேர்ந்து திருமூர்த்தியின் தொழிலுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. குடும்பமும் பெருகி தொழிலும் க்ஷீணமாய் விட்டால் எப்படிப் பிழைப்பது? இந் நிலைமையில் நாலைந்து வருடங்களாகி விட்டன. எல்லா மாதங்களையும்விட இம்மாதம் அடியோடு வருமானமே இல்லை.

திருவேணி :—நேற்று யாரோ தேடினுரே அவர் இன்னும் வரவில்லையா? கார்த்திகைப் பண்டிகைக்கு இன்னும் மூன்று நாட்கள்தானே இருக்கின்றன.

திருமூர்த்தி :—வேணீ! நமக்கு இப்போது சரியான வேளை இல்லை போலிருக்கிறது. நேற்று வந்தவரை அந்த கடைக்காரரின் கடையில் பார்த்தேன். இனிமேல் அவர் இங்கு ஏன்

வருவார்? 'கார்த்திகை வந்து விட்டதே, வருடம் ஒரு நாள் வரும் அழகான பண்டிகைக்கு செய்வதற்குக் கூட நம் கை தற்சமயம் வரண்டு கிடக்கிறதே' என்று என் மனம் தவியாய்த் தவிக்கிறது. குழந்தைகள் பட்டாசு சுடும் ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டு ஏங்கி நிற்கிறார்கள். அதைப் பார்க்கும்போது மனம் பதறுகிறது. என்ன செய்வேன்?

திருவேணி:—பட்டாசு இல்லாது போனாலும் போகட்டும். அரை வீசை எண்ணெயும், அதற்கான திரி, அகல் முதலியனவும் வாங்கி, நைவேத்யத்திற்கு ஒரு பழமாவது வைத்து கார்த்திகைப் பண்டிகையை நிறைவேற்றும்படியான உதவி கிடைத்தாலும் போதும். வருடத்திற்கு ஒரு முறை வரும் உயர்ந்த பண்டிகை யல்லவா இது?

அச்சமயம், பட்டாசை எறிந்ததனால் மனங் கலங்கிப்போன குழந்தைகள் அழுதுகொண்டே உள்ளே ஓடி வந்து பெற்றோரின் மீது விழுந்து கட்டிக் கொண்டு விக்கி விக்கி அழுதபடியே,

வாஸ:—அம்மா! அம்மா! பக்கத்தாத்து பொண்ணு பட்டாசு சுட்டுண்டிருக்கா. நாங்க அங்கே நின்னு வேடிக்கை பாத்தோம். அதுக்கு அந்த தாதா பட்டாசெ கொளுத்தி எங்க மேலெ போட்டுட்டாம்மா (விக்கி விக்கி அழுகிறாள்) நாங்க ஓடியே வந்துட்டோம்.

திரு:—அம்மா! வாஸந்தி! நீ அப்படீல்லாம் போய் நிக்கக் கூடாதுன்னு சொன்னேனே....எம்மா அங்கே நிக்கணும்? அவாளுக்கு ஒன்னே கண்டா எளப்பமா இருக்கு. நீ இனிமே அவாளோடே பேசாதேம்மா! (குழந்தையைத் தடவிக் கொடுத்து சமாதானம் செய்கிறாள்.)

ரங்க:—அப்பா! இனிமே அவாத்துப் பக்கமே போகமாட்டோம். எங்களுக்கு எம்பா பட்டாசு வாங்கித் தரல்லே? பட்டாசுப்பா! எனக்கும் அக்காக்கும் சுடணும்னு ஆசையா இருக்குப்பா! தீபாவளியும்போது கொஞ்சமா வாங்கிக் குடுத்துட்டு கார்த்திக்கு ரொம்ப வாங்கித் தரேன்னு சொன்னயேப்பா! இப்ப எம்பா இன்னும் வாங்கல்லே?

திருமூர்த்தி :—கண்ணு ! ராஜு ! கார்த்தி பண்டிகைக்கு இன்னும் மூணு நாள் இருக்கே, அதுக்குள்ளே ச்வாமி எனக்கு பணம் குடுத்தா ஒடனே நெறய பட்டாசு வாங்கித் தரேன். இப்போ கையிலே காசில்லேடா கண்ணு. (கண்ணில் ஜலம் ததும்புகிறது.)

வாஸந்தி :—(அப்பா மடியில் தாவி உட்கார்ந்து) அப்பா! ஒங் கையிலே இப்பொ பணமில்லே ?....

திருமூர் :—இல்லேடா கண்ணு !

வாஸந்தி :—எம்பா ஒனக்கு மாத்தரம் பணமில்லே ? எல்லா ராத்து பசங்களும் பட்டாசு சுட்ராளே ! அவா அப்பாக்கு மாத்திரம் பணம் ஏதுப்பா ?

திருமூர் :—வாஸந்தி ! அவாள்ளாம் புண்ணியம் பண்ணவாம்மா ! நான் பாவத்தைப் பண்ணவன். அதனுலேதான் கடவுள் எனக்குப் பணத்தெ குடுக்கல்லே. இதோ பாரு வாஸந்தி ! ராஜு ! காசைப் போட்டு பட்டாசு வாங்கி அதை கொளுத்தி கரியாக்ரதுலே என்ன லாபம் சொல்லு. நமக்கு இப்ப கொஞ்சம் பணம் கடவுள் குடுத்தாக்கா அதைக் கொண்டு நெறய விளக்கு ஏத்தி ச்வாமிக்கு வைத்தா ரொம்ப நல்லது. புண்ணியமுண்டு. பார்க்க ரொம்ப அழகா இருக்கும். கடவுளுக்கும் அது ரொம்ப சந்தோஷமாயிருக்கும்.

வாஸ :—அப்படின்னு பட்டாசு வாங்கித் தரமாட்டயா? இப்ப பட்டாசு சுட்ரவாள் மேலே எல்லாம் கடவுளுக்கு கோபம் வருமா ? போப்பா ! அது பொய். கடவுளுக்கு கோபமே வராதுன்னு அம்மா கதை சொல்லி இருக்காளே, அந்த கடவுள் எம்பா நமக்கு மட்டும் பணங் குடுக்கல்லே ?

திருவேணி :—வாஸந்தி! நீ சமத்தோன்னோ! அப்பா கையிலே காசிருந்தா உங்களுக்கு வாங்கித் தராமே இருப்பாரா ! நீ தான் பாக்கரயேம்மா நாலு நாளா ஒரு ரவிக்கைகூட யாரும் தெக்கதரல்லே. மெஷினே வெச்ச எடத்துலேயே இருக்கு. அப்பாவெ வெறுமெ தொந்தரவு செய்தா அவருக்கு வருத்தமா இருக்காதா ! சாமி நமக்கு குடுக்கட்டும். அதுலே நாம்ப முதல்லே கார்த்திக்கு விளக்கு ஏத்தர வேலேதான் செய்யணும். அதுக்கு மேலே பட்

டாசு வாங்க முடிஞ்சா வாங்கித் தரேன். விளக்கு எத்தறதுதான் முக்கியம்.

வாஸ:—எம்மா! அப்படின்னு சாமியெ வேண்டிண்டா குடுக்கமாட்டாரா? யார் யாரோ சாமியெ வேண்டினு; ஏதேதோ குடுத்தாருன்னு நீ கதெ சொல்றயே! அப்படி நமக்கும் கொடுப்பாரா! (கொஞ்சலாக தந்தையை நோக்கி) அப்பா! நீ வருத்தப் படாதே! நாங்க சாமியெ வேண்டிண்டு ஒனக்கு நெறய பணம் குடுக்கச் சொல்ரோம். அப்ப வாங்கித் தரயாப்பா! அடே ராஜு! நீ எந்து வாடா! நாம்ப சாமியெ வேண்டிக்கலாம்.—

என்று கூறிக்கொண்டே ராஜுவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே வெளியே ஓடினுள். தம்பதிகளின் கண்கள் தடாகம்போல் நிரம்பின. பெரு மூச்சு மார்பைப் பிளந்துகொண்டு வந்தது. வேணி பூமாதேவியைப் பார்த்தாள். மூர்த்தி வேணியைப் பார்த்தான். இருவரும் பதுமைபோலானுர்கள்.

## 3

குழந்தைகளின் மனத்தில் விவரிக்க இயலாத பெருத்த விசனமும், குழப்பமும் உண்டாகி விட்டன. அவர்கள் மனத்தில் கடவுளை வேரோடு பிடுங்கிக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற பெரும் ஆவல் தாண்டவமாடுகிறது. இடை இடையே அங்காங்கு சப்திக்கும் பட்டாசின் சப்தம், இவர்களின் மனத்திலுள்ள உறுதியைக் குலைத்து ஆசையைக் கிளறுகிறது.

இருவரும் தெருப்பக்கம் போனுர்கள். தாங்கள் கடவுளை எப்படி வேண்டுவது? தங்களுக்கு ஒன்றுமே தெரியாதே என்று சற்று விழித்தார்கள். மீண்டும் உள்ளே வந்தார்கள். அப்போது மூர்த்தி எழுந்து வெளியே சென்றுன். வேணி குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீருக்காகக் குழாய்ப்பக்கம் சென்றுள்.

இச்சமயத்தை யறிந்த குழந்தைகள் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே வந்தார்கள்.

தினம் தம் பெற்றோர்கள் பூஜை செய்யும் படத்தருகில் சென்று நமஸ்காரம் செய்தார்கள். "ச்வாமீ! எங்கப்பாக்கு நெரய பணம் குடுக்கமாட்டயா! ஊர்லே எல்லாரும் பட்டாசு சுட்ராளே! எங்களுக்கு மட்டுந்தானு ஒன்னுமில்லே? சாமீ! எங்கப்பாவும், அம்மாவும் நித்தியம் ஒன்னே வேண்டிக்கிறளே! அவாளுக்கு நீ ஏன் பணங் குடுக்கமாட்டேங்கறே? எனக்கும், என் தம்பிக்கும் பட்டாசு சுடணும்னு ஆசெ அடிச்சுகிறதே. பட்டாசுக்காவது பணங் குடுக்கமாட்டயா?" என்று வாஸந்தி தோத்திரம் செய்தாள். ராஜு "அக்கா! ச்வாமிக்குப் பாட்டு பாடினுதான் ரொம்ப இஷ்டம்னு அம்மா சொல்ராளே! உனக்குப் பள்ளிக்கூடத்லே சொல்லிக் குடுத்தாளே அந்தப் பாட்டே இப்ப பாடி சாமியெ வேண்டலாண்டீ!" என்றான். வாஸந்தி அதை உடனே ஆமோதித்துப் பாடவாரம்பித்தாள்.

ராகம்—மால்கோஸ். ஏக தாளம்.

கதி இலெ கருணை செய்வாய் மதுசூதனனே!
மனம் மிக நொந்தேன். (கதி)

1. விதியினை மாற்றிடும் வேந்தன் நீ யல்லவோ!
மதுவெறியன்போல் மயங்கிடல் நீதியோ! (கதி)

2. பக்தரைக் காத்திடும் பணி மறந்தாயோ!
உத்தமனே இன்னும் உறக்கம் கொள்ளாதே! (கதி)

"ச்வாமீ! எங்கம்மா, அப்பா அழுதாக்கா எங்களுக்கும் அழுகை வரது. நீ அவாளே அழாமெ பாத்துக்க மாட்டியா! பணம் குடுக்கமாட்டியா! எங்க ஆசெயெ பூர்த்தி செய்யமாட்டியா! சாமீ! பெருமாளே!" என்று குழந்தைகள் மனங் குழைந்து வேண்டும்போது இடுப்பில் தண்ணீர் குடத்துடன் திருவேணி இதைப் பார்த்துக்கொண்டே வந்துவிட்டாள்.

குழந்தைகளின் தூய்மையான இதய வேகத்தின் உணர்ச்சி வெள்ளமும், இனிமையாக மழலை மொழியில் பாடும் பாட்டும் அவள்

மனத்தைப் பரவசமுறச் செய்தன. கண்ணீர் பெருகி விட்டது. தான் வந்ததைக் குழந்தைகளறிந்தால், பாட்டை நிறுத்திவிடப் போகிறார்களே என்று கதவின் பக்கத்திலேயே நின்று இவர்கள் பக்தியைக் கண்டு சந்தோஷமடைந்துகொண்டிருந்தாள்.

குழந்தைகள் மீண்டும் "ச்வாமீ! நீ எங்கப்பாக்கு நெறய துணியெ தெக்க வாங்கி குடு. அப்பா எனக்குப் பட்டாசு வாங்கித் தருவா. அந்த பட்டாசெ ஒன் முன்னே வச்சு ஒனக்கே பூஜை பண்ணிட்டு ஒன்னெதிரேயே சுட்டுடரோம். ஒனக்கு இன்னும் நெரய வளக்கு ஏத்தி வைக்கரோம்" என்று வேண்டிக்கொண்டு நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்து வந்தார்கள். வேணி அப்போதே வந்தவள் போல் உள்ளே சென்று குடத்தை வைத்தாள். சந்தோஷப் பெருக்குடன் குழந்தைகள் ஓடிவிட்டார்கள்.

தாங்கள் ச்வாமியை வேண்டிக்கொண்டு விட்டதால் உடனே ச்வாமி தங்களுக்குப் பணம் கொடுத்துவிடுவார் என்ற ஓர் நம்பிக்கை அவர்கள் மனத்தில் ஊன்றிவிட்டதால், தங்கள் வீட்டுக்கு யார் வருவார்கள்? யார் துணி கொடுப்பார்கள்? என்கிற எதிர்பார்ப்பும், அதே எண்ணமான ஏக்கமும் உண்டாகிவிட்டன. தன் பிதாவுக்கு யாராவது துணிகள் தைக்கக் கொடுத்தால்தான் பணம் இல்லாவிட்டால் இல்லை என்ற திட்டம் மட்டும் வாஸந்திகாவுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது.

எதிர் சாரியிலுள்ள மூர்த்தியின் போட்டிக் கடைக்கு ஏராளமான ஜனங்கள் செல்வதைப் பார்க்கும்போது இளமையும், தூய்மையும் கலந்த இளந்தளிர் போன்ற வாஸந்திகாவின் இதயத்திலும், தன் பிதாவுக்கு இம்மாதிரி வரவில்லையே என்ற எண்ணமும் அந்த உணர்ச்சியும் உண்டாகியது. அன்று வெகு நேரம் வரையில் வீதியிலேயே நின்று பார்த்தாள். ஒருவர் கூட வராமையினால் வாஸந்திகாவின் மனத்திற்கு சற்று சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டு விட்டன.

வாஸந் :—ராஜு! சாமிக்கு கொஞ்சங்கூட புத்தியே இல்லேடா! நாம்ப இத்தனே வேண்டிண்டும் அப்பாவுக்கு வேலெ குடுக்க யாருமே வரல்லே. எதிர் கடைக்கு மட்டும் எத்தனெ பேர் போரா பாத்தியா! சாமி ரொம்ப கெட்டவர்டா!

ராஜு :—ஆமாம் அக்கா! சாமிக்கு எரக்கமே இல்லெ. அக்கா நான் ஒன்னு சேயட்டுமா! அந்த கடைக்கி எதிரெ நின்னுண்டு துணி கொண்டுவரவாளேல்லாம் பாத்து எங்கப்பா கிட்டெ குடுங்கோ! ரொம்ப நன்னு தெச்சு தருவார்னு கூட்டுண்டு வரட்டுமா?—என்ருன்.

வாஸ :—ராஜு! நாங்கூட அதாண்டா நெனச்சேன். நீயே சொல்லிபுட்டே. நாம்ப ரெண்டு பேரும் அந்த மாதிரி சேசு ரெண்டுபேரெயானு அழைச்சுண்டு வந்துட்டமானுக்க ஒரு துணிக்கார பணம் பட்டாசுக்கும், இன்னொரு துணிக்கார பணம் வளக்கு ஏத்தரத்துக்கும் ஆகும். அப்பாக்கு தெரியாமெ அப்படி தாண்டா செய்யணும். வாடா—என்று ராஜுவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு திண்ணையை விட்டிறங்கினுள்.

அப்போதுதான் இதைக் கேட்டுக்கொண்டே வந்த திருமூர்த்தி இவர்களிருவரையும் தடுத்து “நில்லுங்கள் : நீங்க ரெண்டு பேரும் நல்ல புத்திசாலி, சமத்துன்னு பாத்தேனே! இப்படியா அசட்டுத்தனமா ஓடுவா? சிச்சி! இந்த மாதிரி செய்யவே கூடாது. ச்வாமி நமக்குன்னு குடுத்தாதான் நாம்ப வாங்கிக்கலாமெ தவிர எதிராளிக்கு வரத்தெ நாம்ப தடுக்கறது ரொம்ப பாவம்.தெரியுமா? நமக்கு இல்லாபோனுலும் கஷ்டப்படலாம். அசலாரெ கெடுக்கவே கூடாது. சாமி கண்ணெ குத்திடும். பிச்செ வாங்கப் போராப் பலே இப்படிப்பட்ட காரியம் செய்தால் இனிமெ அடிப்பேன். பத்ரம். வாருங்கோ உள்ளே” என்று அதட்டியபடியே இழுத்துக்கொண்டு போய் விட்டான்.

குழந்தைகளின் தவிப்பும், துக்கமும் இன்னும் அதிகமாய் விட்டன. இரவு சாப்பாடும் கொள்ளவில்லை; சரியான நித்திரையும் கொள்ளவில்லை. தாங்கள் பட்டாஸ் வெடிப்பதுபோலும், விளக்கு நிறைய ஏத்தி வைத்திருப்பதுபோலும் கனவு கண்டுகொண்டே வாய்ப் பிதற்றும் குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்ட தம்பதிகளின் விசனமும், ஏக்கமும் அதிகரித்தன. கடவுளைத் தொழுது வேண்டியபடியே எப்படியாவது குழந்தைகளின் ஆவலை ஓரளவு பூர்த்தி செய்தால் போதுமே! என்ற ஏக்கம் பிடித்துக் கொண்டது.

மைதிலிக்கு வயது இன்னும் 15 பூர்த்தியாகவில்லை. 'பால் வடியும் முகம்; சந்திர பிம்பம் போன்ற முகம்' என்றால் அவளுக்கே தகும். ஆனால் அம் முகத்தைப் பார்த்த யாரும் "இத்தனை அழகிய முகம் ஏன் இப்படி வாடி வதங்கிச் சோபையற்றுக் கிடக்கின்றது?" என்று தம்மை மறந்து கூறிவிடுவார்கள். அவளுடைய பூர்வோத்திரம் அவளுக்கே தெரியாது என்றாலும் மிகையாகாது.

மைதிலிக்கு தனியரசியைப் போன்ற ப்ரம்மாண்ட பங்களாவும், அதற்கான மற்ற சகல சவுகரியங்களும், பரிபூர்ண செல்வமும் இருந்தும் ஏன் இந்த வாட்டம்? இவ்வளவு சோகம்? அடிக்கடி விடும் பெருமூச்சின் போராட்டமென்ன? இவைகளை அவ்வழகிய நங்கை தனது 12 வயதான பிறகே அறிந்தாள். அன்று முதல் இன்று வரையில் அவள் அறிந்த விபரீதமான விஷயம் அவளையே விழுங்க வரும் பேய்போலாயிற்று.

அதாவது,—மைதிலியின் பெற்றோர்கள் மிகுந்த செல்வவந்தர்கள். ஏராளமான செல்வக் களஞ்சியத்திற்கு மைதிலியே பொறுப்பாளி. அவளுடைய துரதிருஷ்டம், அவளுடைய தாயாரை அவள் பிறந்த அன்றே விழுங்கிவிட்டது. தந்தை அவளை வைத்துக் கொண்டு வளர்க்கும் முறையில் வெகு ச்ரமப்பட்டார். மனித சகாயத்திற்காக தன் உடன் பிறந்த சகோதரியின் குடும்பத்தையே வீட்டில் கொண்டு வைத்துக்கொண்டார். குழந்தை வளர்ப்பில் பெரும் கவனத்தைச் செலுத்தி வந்த பிதாவும், மைதிலியின் மூன்றாவது வயதில் திடீரென்று இதய வெடிப்பினால் அகால மரணத்தை யடைந்துவிட்டார்.

ஆனால் ப்ராணன் போகும்போது தன் சகோதரியின் கையில் தன்னருமை கண்மணியைப் பிடித்துக் கொடுத்து அவளைக்

காப்பாற்றும்படி வேண்டிச் சென்றார். மூன்று வயது குழந்தைக்கு என்னதான் தெரியும்? தன்னிடம் அன்பாயிருந்த ஒரு ஆசை முகம் மறைந்து போயிற்றே என்று வெளியிட்டுக் கூற முடியாத ஏக்கமும், தாக்கலும் கொண்டு அழுது அழுது மெலிந்து நோயாளியைப் போலாய்விட்டாள்.

**மை**திலியின் அத்தையும் அவளிடம் அதிக பக்ஷமாகவே இருந்து துக்கம் தெரியாமல் வளர்த்து வந்தாள். நாளடைவில் அத்தையின் ஆவல் முற்றும் மைதிலியின் திரண்ட செல்வத்தின் மீதே பாய்ந்துவிட்டது. "அவள் பெண் குழந்தையாகையினால் அத்தனை சொத்தும் அவளை யார் மணக்கிறார்களோ அவர்களைத் தானே சேர்ந்துவிடும்? மற்றபடி அதை எவ்விதமும் அசைக்க முடியாது. அச்சொத்தை நாம் அபகரித்து எடுத்துக்கொண்டாலுங்கூட அவள் பெரியவளாகிய பிறகு நம்மீது அவள் விவகாரம் நடத்தக்கூடும். ஆகையால் அவ்வாறு ஏதும் வராதபடிச் செய்துவிடவேண்டும். எவ்வகையில் அம்மாதிரி செய்யலாம்?" என்று சதா அதே யோசனையுடன் இருந்தாள்.

**அ**வளுடைய சதியாலோசனைக்குத் தக்கபடி அவளுடைய மகனின் இரண்டாவது சம்சாரம் திடீரென்று விஷ பேதியில் இறந்துவிட்டாள். குழந்தை குட்டிகள் அதிகமில்லை. இறந்த மருமகளுக்கே 35 வயதாகிறது. அவளே இரண்டாந்தாரம் என்றால் அந்த அத்தையின் மகனுக்கு 50 வயதிற்குப் பஞ்சமே இல்லை. அத்தையின் எண்ணம் முற்றும் தன் யோசனைக்கு முடிவு கிட்டுமா என்று இருந்தது; அதற்கு அனுகூலமான முடிவே கிடைத்துவிட்டது.

**த**ன் மகனுக்குச் சரியானபடி உரை ஏற்றி "இச் சொத்துக்களை நீயே அடையவேண்டுமாயின், மைதிலியை நீயே மணந்து கொண்டு ஒருவிதமான பேச்சுக்கும் இடமில்லாது செய்துவிடலாம். திரண்ட செல்வமும், இளம் பெண்ணும் ஒன்றாகக் கிடைப்பதே துர்லபம். ஆகையால் யோசனையே வேண்டாம்" என்று தூபம் போட்டாள்.

**ஆ**னால், 50 வயதான வாலிபன் தாயின் மொழியை உடனே ஆமோதித்துவிட்டார்; எனினும் "ஏம்மா! வயசு குழந்தை

யாயிற்றே! அதை மணந்து....” என்று முடிப்பதற்குள் தாயார் இடை மறுத்து “ஆமாண்டா! பெண்கள் வெகு சீக்கிரம் வளர்ந்து பக்குவமாய் விடுவார்கள். இன்னும் 7 வருடம் ஓடி மறைந்து விடுகிறது. இதற்காக இத்தனை செல்வத்தை விடுவார்களோ!” என்றாள்.

அப்போதும் அவர் “ஒருகால் குழந்தைக்கு இஷ்டமில்லை என்றால் என்ன செய்வது?” என்றார். தாயார் முறைப்பாகப் பேசத் தொடங்கி “ஆமாண்டா! இஷ்டமும், மண்ணும் அதற்கு இப்போது என்ன தெரியும்? உன்னுடைய நன்மைக்குத்தான் சொல்லுகிறேன். சொத்து வருவதற்கு மட்டுமல்ல. நான் கிழட்டுப் பிணம். என் கண் மூடிவிட்டால் உனக்கு ஒரு ஆதரவு வேண்டாமா? உன்னுடைய காலத்திற்கும் ஒண்டிக் கட்டையாகவா இருப்பாய்? அதோடு இனிமே உனக்குப் பெண் குடுப்பதும் துர்லபம். சிறு குழந்தையில் விவாகத்தைச் செய்துவிட்டால் எல்லாம் சரியாகிப் போய்விடும்.

என் காலத்திற்குப் பிறகு நீ தரையில் விழுந்தால், கஞ்சி வார்க்கவும், ஐயோவென்று சொல்லவும் ஒருவர் வேண்டாமா? அதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன்” என்று திட்டமாகக் கூறிவிட்டாள். இதற்குமேல் அப்பீலே ஏதுமில்லாது இரண்டு மூன்று மாதத்திற்குள் அவர்கள் வெளியூருக்குச் சென்று குழந்தை மைதிலியை அந்தக் கிழட்டு வாலிபனுக்கு மணம் செய்து, அவளது கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டார்கள்.

குழந்தை மைதிலிக்கு, கல்யாணம் என்றால் என்ன என்னும் வார்த்தையே புரியாத நாளில் ரகஸியமாயும், வெளியூரிலும் நடந்து விட்ட இந்தக் கல்யாணத்தையும், அவள் கழுத்திலுள்ள தங்கத் தாலியையும் அவள் ஏதோ ஒரு விளையாட்டாக நினைத்ததுமட்டு மன்றி, தனக்கொரு புதிய நகை கிடைத்ததாகச் சந்தோஷப் பட்டாள்.

இந்த அனியாய விவாகம் நடந்ததை அறிந்த ஊர் ஜனங்கள் அத்தையின் அக்ரமத்தை பலமாகக் கண்டிக்கவாரம்பித்து “இப்படியும் ஒரு குழந்தையின் வாழ்க்கையைப் பாழ் படுத்தலாமா?”

என்று கேட்டதற்கு அத்தை வெகு தந்திரமாக தான் எற்கெனவே ஜோடித்து வைத்திருந்தபடி "ஆமாம். என்னை விட ஊராருக்குத்தான் அதிகமாக அக்கரை வந்துவிட்டதுபோலிருக்கு. அக்குழந்தையின் நன்மையை உத்தேசித்து என் மகனுவது தாலி கட்டினுனே அதைப் பாருங்கள். அந்தப் பெண்ணின் தேகத்தில் துர் வ்யாதி இருப்பதை நானல்லவோ அறிவேன். இன்னும் வயதாக ஆக அந்த வ்யாதி முற்றிவிட்டால் அவளை யாரும் கண்ணுல்கூடப் பார்க்கமாட்டார்கள். கன்னி கழியவும் முடியாத அவமானம் வந்துவிட்டால் அதை எப்படி தாங்கமுடியும்? இந்தக் காரணத்தினுல்தான், என் தம்பிக்கு நான் கொடுத்த வாக்குப்படி செய்து முடித்தேன். இன்னும் வயசாகி விட்டால் இவளையும் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேனென்று ஏதாவது தடபுடல்கள் செய்யலாம். அம்மாதிரி செய்தால் நான் இவளை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

அதோடு என் காலம் வரையில் கஷ்டப்பட்டுக் கட்டிக் காத்துவிடுவேன். என் கட்டை சாய்ந்துவிட்டால், இந்த சிறு பெண்ணை யார் கேட்பார்கள்? கல்யாணமும் ஆகாமல், ஆதாரமும் இல்லாதிருந்தால் கெட்ட பெயரும், விபரீதமான ஆபத்துமல்லவா சம்பவிக்கும்? அம்மாதிரி ஏதாவது வந்துவிட்டதென்ருல் அவள் கதி என்னவாகும்? பிறகு அவள் பிழைப்பு கால் காசுக்கு உபயோகப்படுமா? நாலு பேர் காரியுமிழ்ந்து கைகொட்டியல்லவா சிரிப்பார்கள். என்னமோ! அவனேடுகூடப் பிறந்த பாசத்திற்காக, இந்த பயங்கரங்களை எல்லாம் யோசித்துத்தான் இம்மாதிரி ஒரு காரியத்தைச் செய்து வைத்தேன். பெண்கள்தான் கிழவிகளாய் விடுவார்கள். ஆண்களுக்கென்ன அப்படியே ராஜா மாதிரி இருப்பார்கள். என் பிள்ளையும் இளமையே மாருத குமரன் போலத்தான் இருக்கிருன். அவனுக்கென்ன குறைச்சல்?" என்றெல்லாம் பெரிதாக வ்யாக்யானம் செய்து மழுப்பிவிட்டாள்.

ச்வர்ண விக்ரகம் போன்றுள்ள மைதிலிக்கு கொடிய வ்யாதி இருப்பதாக இந்தப் பேராசைக்காரி டமாரமடித்து வரும் விஷமப் பிரசாரத்தின் விபரீதத்தை அந்த இளஞ் சிறுமி, பால் மணம்

மாறுத பாலகி, உலகமறியாத இளங் குருத்து எங்ஙனம் அறிவாள்? அவள் விளையாட்டும், அவள் படிப்பும், அவளுடைய கும்மாளமும் ஓர் தனித்த இன்பத்துடன் 12 வயது வரையில் கழிந்துவிட்டன.

பள்ளிக்கூடத்து சகபாடிப் பெண்களில் இரண்டொருத்திக்கு விவாகமாகிய பொழுது "ஏண்டீ மைதிலி! உனக்கு எப்போ கல்யாணம்? நீ யாரை மணக்கப் போகிருய்?" என்று கேட்கும் போதுதான் மைதிலிக்கு வெட்கம் பாதிக்கும். அக் கால உணர்ச்சிகள் அவளைச் சூழ்ந்துகொள்ளும். அவர்களின் கல்யாணத்தைப் பார்க்கும்போது, அவள் மனத்திலும் கல்யாண ஆசை சிறிது தோன்றி, இந்தக் கல்யாண மாப்பிள்ளையை விட அழகான மாப்பிள்ளையாகப் பார்த்து, தான் மணக்கவேண்டு மென்று ஆசை கொள்வாள்.

சில சமயம் அவள், தனக்கு மிகவும் வேண்டியவள் அத்தை தான் என்பதை யறிந்திருப்பதால் "என் அத்தை! எனக்கு எப்ப கல்யாணம் செய்வே? கல்யாணம் பண்றப்போ அழகான பிள்ளையை நானே பொறுக்கிப் பாத்துதான் கல்யாணம் பண்ணிக்கிவேன்" என்பாள். அப்போது அத்தை "சீ அசடே! உனக்கு தான் கல்யாணம் ஆய்ட்டுதே. அத்தான்தான் உன் ஆமடையான்" என்று சொல்லும்போது, அது விளையாட்டு வார்த்தை என்று எண்ணி "ஊம். அத்தானை நான் பண்ணிக்கவே மாட்டேன். அவர் தாதான்ணு" என்று கூறிக்கொண்டே ஓடி விடுவாள். இவைகளெல்லாம் பத்து வயதுக்குட்பட்ட லீலையாக முடிந்தது.

ஒரு சமயம் மைதிலியின் சினேகிதைக்கு விவாகம் நடந்த போது அவள் அந்த விவாக வீட்டிலேயே இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் அவள் மனத்தில் இம் மாதிரி தனக்கும் ஒரு அழகிய கணவன் வந்து தானும் மண வைபவங்கள் நடத்திக் களிக்கவேண்டும் என்று தனக்குள் ஆசைப் பட்டுக்கொண்டே இருந்தாள்.

கல்யாணப் பசங்களுக்கு நலங்கு இடும்போது, பிள்ளை வீட்டாரில் ஒரு அம்மாள் மைதிலியைக் காட்டி "இந்தப் பெண் யாரு?

வெகு அழகாக இருக்கிறது. பாட்டும் குயில்போல் பாடுகிறது. இதைப் பார்த்தால் எனக்கு மிகவும் பிடிக்கிறது. இதைப் பேசி முடித்தால், நம்ப சுப்புணிக்கே இவளைக் கல்யாணம் செய்துவிடலாம். இவள் யார் வீட்டுப் பெண் ?" என்று விசாரித்தாள்.

இவ்வார்த்தைகள் மைதிலியின் காதில் விழும்போதே அவள் மனத்தில் ஒருவிதமான ஆனந்தம் உண்டாகியது. அவள் மெல்ல திரும்பிப் பார்த்தாள். அந்தம்மாள் ரதி போன்ற அழகுடன் விளங்கியதால், அவள் மகனும் அவளைப்போலவே அழகாகவிருப்பான்; தான் அவனை மணக்கலாம் "கன்யா வரயதே ரூபம்" என்ற ச்லோகத்தின்படி முடிவு செய்துகொண்டாள்.

இதற்குள் அங்கிருந்த பெரியம்மா ஒருத்தி "போதும்; இந்தப் பெண்ணைத்தானா நீங்க மாட்டுப் பெண்ணாக அடையணும். இந்தப் பெண்ணைப்போல் பாபாத்மா உலகத்திலேயே இல்லை. திரண்ட செல்வத்தில்தான் பிறந்தது. ஆனால் பிறந்த உடனே பெற்றோரை விழுங்கிவிட்டது. அத்தை நாசகாலி இருக்கிறாள். அவள்தான் இந்தப் பச்சை குழந்தையை எடுத்து வளர்த்து பணத்திற்காக ஆசைப்பட்டுக்கொண்டு, இல்லாத பொல்லாத கட்டுக் கதைகளை எல்லாம் கட்டி, இந்தப் பெண்ணுக்கு துர் வ்யாதி இருப்பதாகக் கூறி, பறை சாற்றி, தன்னுடைய 50 வயதான மகனுக்கே இந்தப் பெண்ணை 5 வயதிலேயே கல்யாணத்தைச் செய்துவிட்டாள்" என்று முடிப்பதற்குள், அந்த அம்மாள் "ஐயையோ! இதுக்கா கல்யாணம்! கிழவனுக்கா குடுத்தார்கள்? அட அக்ரமமே! கிளியாட்டம் அழகும், குயிலாட்டம் பாட்டும், ஐயோ! பாழாய்ப் போய்விட்டதே" என்று கையைத் தட்டி விசனத்துடன் கூறினாள்.

இதுபரியந்தம் மனத்தில் பலவித உணர்ச்சியுடனும், ஆனந்த ஸ்வரூபியாயும் உட்கார்ந்திருந்த மைதிலியின் காதில் இவ்வார்த்தைகள் விழுந்த க்ஷணமே, அவள் தலைமீது எரிமலையே புரண்டுவிட்டதுபோலும், தான் உட்கார்ந்திருக்கும் பூமியே வெடித்துவிட்டதுபோலும் அதிர்ச்சி உண்டாகிவிட்டது. கண்கள் இருண்டு அந்தகார உலகத்தில் அவளை இழுப்பதுபோல் தோன்றியது.

தம்பதிகளின் தடபுடலான நலங்கின் வேடிக்கையில் எல்லோரும் ஆழ்ந்திருந்த சமயம், தான் இங்கு இனி நிற்பது கூடாது என்ற வெறுப்பும், துக்கமும், எண்ணமும் ஒன்று கூடியதும், ஏதோ சூனியத்தில் நடக்கும் பொம்மைபோல் மைதிலி மெல்ல நழுவி தன் வீட்டிற்கு வந்து, தன்னறைக்குச் சென்று தடாரென்று கட்டிலின்மீது விழுந்துவிட்டாள். இன்றோடு தன் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி விழுந்துவிட்டதாயும், தன் பிறப்பின் சகாப்தம் முடிந்துவிட்டதாயும் தோன்றிவிட்டது.

இனி 'விம்மினள், அழுதாள், முட்டிக்கொண்டாள்' என்று கூறவேண்டுமா? அவளுக்கு ப்ரக்ஞை வந்து கண்ணைத் திறந்து பார்க்கும்போது, மத்தியில் சில தினங்கள் ஓடி மறைந்துவிட்டதை அறிந்தாள். அவள் பக்கலில் அத்தையும், (அத்தானை தாதாவென்று தான் மைதிலி கூப்பிடுவாள்) அந்த தாதாவும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் தன் வாழ்வை அள்ளிக் குடித்த எம ஸ்வரூபங்கள் என்பதையறிந்ததும், கண்ணை கெட்டியாக மூடிக்கொண்டு குப்புறப் படுத்துவிட்டாள்.

கல்யாண வீட்டிலிருந்து வந்த அந்நிமிடம் முதல் மைதிலி ஊமையாகிவிட்டாள் என்றால் மிகையாகாது. யார் என்ன கேட்டபோதிலும் பதில் பேசுவதையே அடியோடு விட்டாள். தன் எதிர்காலத்தின் பயங்கர எதிரொலியே அவள் காதில் கோரமாக சப்தித்து, உயிரை உறிஞ்சும் பூதத்தின் நாதம்போல் த்வனித்தது. தனக்கா தூர் வ்யாதி என்று கட்டுக் கட்டி கயிறு திரித்தாள்? இந்த வார்த்தை ஊரில் பரவியதனால்தான் சிலர் தொட்டு நெருங்கிப் பழகாமலிருந்தார்கள் என்பதை உணர்ந்ததும் அவள் தேகமே தீயினால் எரிவதுபோல் தோன்றியது.

ஒரு தினம் பட்டப்பகலில் வீராவேசங் கொண்டவள் போல் ஒரு ப்ரபல டாக்டர் வீட்டிற்குச் சென்றாள். டாக்டர் வெகு மும்முரமாக வேலை செய்துகொண்டிருக்கையில், இந்த சிறுமி அங்கு சென்று "டாக்டர்! நான் வேலையைத் தடை செய்வதற்கு மன்னிக்கவேண்டும். தாங்கள் என்னை முதலில் சரியாக பரிசோதித்து என் உடம்பில் என்ன வ்யாதி இருக்கிறதென்பதைக் கூற வேண்டும்" என்றாள்.

இச்சிறுமி இம்மாதிரி கேட்பது டாக்டருக்கே மிக்க ஆச்சரியமும், வேடிக்கையுமாகத் தோன்றியது. "எம்மா! உனக்கென்ன உடம்பு என்று இம்மாதிரி கேட்கிறாய்? உனக்குப் பெரியவர்கள் யாரும் வரவில்லையா?" என்றார். மைதிலி சிறிதும் தயங்காமல் "எனக்கு நானேதான் பெரியவள். இதோ உங்களுக்குப் பீஸ் தயாராகக் கொண்டு வந்திருக்கிறேன். என்னைப் பரீக்ஷித்துக் கூறியனுப்புங்கள். எனக்கு ஏதோ கொடிய வ்யாதி இருப்பதாக யாரோ குட்டி டாக்டர் சொல்லிவிட்டதால் எனக்குப் பயமாயிருக்கிறது. அதற்காகத்தான் சந்தேக நிவர்த்திக்கு வந்தேன்" என்றாள்.

இதை நம்பிய டாக்டர், இச்சிறுமியைப் பரிசோதித்து "பெண்ணே! உனக்கு எந்த விதமான வ்யாதியும் இல்லை. நீ பரிசுத்தமாக இருக்கிறாய். உன்னுடைய ஆத்திரந்தான் தலைதூக்கித் தெரிகிறது; வேறு ஒன்றுமே இல்லை. பயப்படாதே! எனக்கு பீஸும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். கற்றுக்குட்டி டாக்டர்களின் வார்த்தையை நம்பி கண்ட மருந்துகளையும் தின்று பாழாகாமல் புத்திசாலியாக வந்து சந்தேக நிவர்த்தி செய்துகொண்டாயே! அதுவே எனக்குப் பெரிய சந்தோஷம். போய் வாம்மா!" என்றார்.

**மை**திலி நோட்டை மேஜை மீதே வைத்துவிட்டு வயிற்றெரிச்சலுடன் வீட்டுக்கு வந்தாள். பிறகு அவளை வெளியில் யாருமே கண்டிருக்க முடியாது. பள்ளிக்கூடமும் நின்றது. தன் சினேகிதைகளையும் தானே வரவேண்டாமென்று தடுத்துவிட்டாள். வயது 13 ஆக விருப்பினும் பாரபுத்தியும், மனோ திடமும் அபாரமாகப் பெருகிவிட்டன. அத்தையும், தாத்தாவும் எத்தனை கேட்டும் என்ன சொல்லியும், ஊமையாவது தன்னுடைய பே.... பே....பாஷையில் பதில் கூறும், மைதிலி அதுவும் அற்று மவுனமாகவே விளங்கினாள்.

**பொ**ங்கி வரும் வெள்ளம் போன்ற மூர்க்க வைராக்யத்துடன் இரண்டு வருட காலம் ஒரே இடத்தில் அடைபட்டுக் கிடந்து பைத்தியம் போலானாள். உடல் மெலிந்து அழகு குன்றிப்

போய்விட்டாள். தன்னுடைய வயது 15 கடந்துவிட்டது என் பதை யறிந்தபொழுதே பாழும் வயதாவது வளராது குழந்தைப் பருவமாக இருக்கக்கூடாதா வென்ற ஏக்கம் உண்டாகியது. தான் இப்படியே கிடந்தால் எங்கே பயித்தியம் பிடித்து விடுமோ என்ற பயமும் உண்டாகியது.

எத்தனை காலமும் தான் இம்மாதிரியே இருந்தால் தனக்கு விடிவு, விமோசனந்தான் ஏது என்ற ஒரு சிறு எண்ணம் ஒவ் வொரு சமயத்தில் தோன்ற வாரம்பித்தது. "ஏன்? நம்மையும் இவ்வுலகந்தானே ஈன்றது. இவ்வுலகந்தானே சுமக்கிறது. இவ் வுலகத்தில் எனக்கு மட்டும் இயற்கையின் தோற்றங்கள் சொந்த மில்லையா! அதை நான் மட்டும் ஏன் அனுபவிக்காமல் இருக்க வேண்டும்? ஆகாயம், பூமி, சூரிய சந்திராதி தாரகைகள், மேகக் கூட்டங்கள், பக்ஷி இனங்கள் முதலிய சகலமும் எல்லோருக்கும் சொந்தந்தானே."........என்ற ஓர் நூதன உணர்ச்சி அவள் மனத் தில் தானே உதயமாகியது. அது முதல் மைதிலி மெல்ல மேன் மாடத்தில் சென்று இயற்கை தேவியின் அழகைக் கண்டு களிக்க வாரம்பித்தாள். சில சமயம் அவ்வூரிலிருக்கும் நதிக்குச் சென்று மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் உட்கார்ந்து கண்ணீர் உதிர்ப்பாள். அந்த நதியில் இறங்கிவிடலாமா வென்றும் நினைப் பாள். ஆனால் "நான் ஏன் சாகவேண்டும்! என்ன தப்பிதம் நான் செய்தேன்?" என்று தானே தீர்மானிப்பாள்.

பருவ காலத்தை யடைந்த பெண்மணி இம்மாதிரி தனி யாகச் செல்வதை உலகம் ஏற்குமா! கிழவரும் அவளைத் தனது வலையில் வீழ்த்தப் பலவிதமான தந்திரங்களையெல்லாம் கையாண்டு பார்த்தார். மைதிலியா அதற்கு பயப்படுகிறவள்? ஒரு கடிதத்தில்,

> "என்னுடைய சகலமான சொத்துக்களையும், வீடு வாசல், நிலம் புலம் முதலிய யாவற்றையும் என் மனப் பூர்வமான சுய உணர்வுடன் வேதாசலத்திற்கு சர்வ சுதந் திரத்துடன் இஷ்டம்போல் அனுபவிக்கும் உரிமையைக் கொடுத்துவிட்டேன்"

என்று எழுதிக் கிழவரிடம் கொடுத்துவிட்டாள். இந்த செய்கை கிழவரையும், அத்தையையும் ப்ரமிக்கச் செய்தது.

எத்தனை விதத்தில் பேசிப் பார்த்தும் மைதிலி வாயைத் திறக்கவே இல்லை. மவுனம், மவுனம்; முற்றிலும் மவுனமாகி விட்டாள். மனக்கோட்டைகள் பல கட்டலாம். சதியாலோசனை சூழ்ச்சிகளும் பல செய்யலாம். ஆனால் அவர்களின் வாணுள் அவர்களுக்குச் சாச்வதமல்ல என்பதை அவர்கள் அறிவதில்லை.

இத்தனை அனுகூலங்கள் செய்த மகா புண்யவதியான அத்தை கண் மூடி மவுனியாகி பரலோக ப்ராப்தியாகி விட்டாள். அதையும் மைதிலி லக்ஷ்யமே செய்யவில்லை. கிழவர் கேட்டதற்கு பதில் சொல்லவும், வீட்டில் உலாவவும் ஆரம்பித்தாள். கிழவர் பார்த்தார். இனிமேல் தான் அதிகாரத்திலேயேதான் நடக்க வேண்டுமென்றும், விளம்பரங்களில் காணும் பால்யம் திரும்பும் மருந்துகளை எல்லாம் கணக்கற்றதாக வாங்கிக் குடித்து பருவ காலத்தை யடைந்து யௌவனமாகிவிட்டால் மைதிலியைத் தன் வயப்படுத்தி விடலாம் என்ற எண்ணத்துடனும் ஆரம்பித்தார். இந்த கொடுமையையும் மைதிலி அறியாமலில்லை. மிகவும் ஆப்தமான ஒரு கிழவர் வாலிபம் திரும்பும் மருந்துகள் வாங்குவதற்கு இவருக்கு ஆப்த சகாவாகச் சேர்ந்ததால் அத்தொழிலில் இருவரும் இறங்கினர்கள்.

மைதிலியின் ஆதி சரிதையை ஒருவாறு அறியும் பொருட்டு விளக்கிவிட்டோம். இந்த கட்டங்களை எல்லாம் தாண்டி நம் கதை யாரம்பிக்கும்போது, நாம் முதலில் தெரிவித்தது போல் மைதிலி விசனமே உருவான பிம்பம்போல் ஓர் சோபாவில் வீற்றிருந்தாள்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய காலெண்டரின் அன்றைய தேதி அவள் கண்ணில் அகஸ்மாத்தாகப் பட்டதும் தீயை மிதித்தவள் போல் துள்ளினுள். ஏனெனில், அதே மாதம் அதே தேதி தான் சில வருடங்களுக்கு முன்பு அவள் வாழ்வு பாழாகி விட்ட ரகஸியத்தை சிநேகிதையின் கல்யாண வீட்டில் அறிந்த நாள். ஆகையால் அதைப் பார்த்த உடனே அந்த நாளின் நினைவும், அன்று நிகழ்ந்த சகல சம்பவங்களும் அந்த காலெண்டருக்குள்ளேயே படக்காட்சி போல் தோன்றின. சோபாவின்மீது அப்படியே சாய்ந்துவிட்டாள்.

அச்சமயம் கிழவர் அட்டகாஸமான அலங்காரத்துடன் அங்கு வந்தார். மைதிலியின் கண்ணீர் கன்னத்தில் வழிந்தோட அவள் சோகப் பதுமையைப்போல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து முகத்தைச் சிடுத்துக்கொண்டு "மூஞ்சியைப் பாரு. எப்போ பாத்தாலும் விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரி உட்கார்ந்திருக்கயே!........மூதேவி!....ஓம் மூஞ்சிலே சிரிப்பே வராதோ?" என்றார்.

மைதிலி :—(தன் வயிற்றெரிச்சலுடன் கிழவரை ஒரு பார்வை பார்த்தாள். தலையைக் குனிந்துகொண்டு) ஆமாம். விளக்கெண்ணெயைக் குடித்தால் தேகத்திற்காவது ஆரோக்கியமுண்டாகும். படுமோச பாதக விஷத்தைக் குடித்திருக்கிறவள் மூஞ்சிலே சிரிப்பு எப்படி வரும்?

கிழவர் :—ஓகோ! என்னடீ! என்னமோ ஒளர்றே. இதோ பாரு கண்ணாடிலே! என்னே நானெ பாத்தாலுங்கூட மன்மதன் போலிருக்கிறேன். எனக்கென்னடீ குறைச்சல்? ராஜாதிராஜன் போல் அழகான........என்று முடிப்பதற்குள் மைதிலி காதைப் பொத்திக்கொண்டு சடக்கென எழுந்து ஜன்னலண்டை சென்று நின்றாள்.

கிழவர் பின்னாலேயே பல்லிளித்துக்கொண்டு வந்து நின்று "ஏண்டீ மைதிலி! கார்த்திகை பண்டிகைக்கு உனக்குப் புடவை வாங்கிண்டு வந்திருக்கேன், இதோ பாரு, என்ன அழகான சேலை?" என்றார். ஆனால் மைதிலி அதைத் திரும்பிகூடப் பார்க்கவில்லை.

அச் சமயம் வீதியில் ஒரு ஜோயிச்சி பிச்சைக்காரி உடம்பெல்லாம் தெரியும்படியான கந்தல் சேலையுடனும், ஒரு கந்தத் துணியில் தூளி கட்டி தோளில் போட்டு அதில் ஒரு குழந்தையை விட்டுக்கொண்டும், "தாயே! தர்மலட்சுமி! குளிர் நடுக்குது தாயே! கொயந்தெ வெரச்சு போவுது தாயே! ஒரு கந்தெ குடுங்க தாயே! மானத்தெ காப்பாத்த ஒரு முழந் துண்டு குடுங்க தாயே!" என்று கத்தும் பரிதாபமான குரல் மைதிலியின் காதில் விழுந்ததும், அவ்வுருவத்தைக் கவனித்தாள்.

அவளால் சகிக்க முடியாத துக்கம் பொங்கிவிட்டது. உலகத்தில் இப்படியும் ஒரு வறுமைப் பேயின் தாண்டவம் இருக்கிறதா வென்று மனம் புழுங்கினாள். தடதடவென்று வீதிப் பக்கம் வந்தாள். இதற்குள் அந்தப் பிச்சைக்காரி இவள் வீட்டுக்கே வந்துவிட்டாள். மைதிலி வாயைத் திறக்காமல் கிழவர் அங்கு வைத்த சேலையை எடுத்து "ஜோயிச்சி! இந்தா இதை ரெண்டா கிழிச்சு பாதியை நீ கட்டிக்கோ, பாதியை தூளி கட்டி குழந்தையை விடு. இந்தா இந்த புடவையையும் எடுத்துக்கோ" என்று அங்கு கொடியிலிருந்த சேலையையும் எடுத்துக் கொடுத்தாள்.

இந்த செய்கையைப் பார்த்த கிழவர் "ஐயோ! ஐயோ!" என்று வாயிலும், வயிற்றிலும், தலையிலும் அடித்துக்கொண்டு "அடி பாவி! படுபாவி! இந்த பிச்சைக்கார நாய்களுக்கா இப்படிப் பட்ட புடவைகளைக் குடுப்பது? நீ நாசமாப் போக!" என்று கூறிக் கொண்டே மைதிலியை அடித்துவிட்டு, பிச்சைக்காரி யிடமிருந்த சேலையைப் பிடுங்கிக்கொண்டு அவளையும் அடித்து "தரித்திர மூதேவி! மானங்கெட்ட முண்டே! போடி வெளிலே, போடி வெளிலே" என்று பிச்சைக்காரியின் கழுத்தைப் பிடித்து இழுத்துத் தள்ளினார்.

பிச்சைக்காரி வயிறு எரிந்து "அடே பாவி! இட்றவங்களையும் வாணும்னு தடுக்கும் புண்யாத்மாவே! ஒனக்கு எந்த நரகந்தான் கடவுள் குடுப்பானோ? இந்த சொத்தெ ஒன் தலெல்லெ தான் போட்டு கொளுத்தப் போறாங்க" என்று திட்டிக்கொண்டே போய் விட்டாள்.

கிழவர் ஆத்திரத்துடன் "என்ன! என்ன!! பிச்சைக்கார நாயிக்கு இத்தனை வாயா! ஆகா! எல்லாம் இந்த ஊமை மூதேவி யாலெதான் வரது" என்று தலையிலடித்துக் கொண்டு தாண்டவ மாடினார்.

# 5

மாலை 5 மணியாயிற்று. எங்கும் பழயபடி பட்டாசின் பேரொலி காதைத் துளைக்கிறது. அந்த ஓசையைக் கேட்கக் கேட்க வாஸந்திகாவுக்கும், ராஜுவுக்கும் ஆசை இன்னும் துளுத்து விட்டது. அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே தமது ஏக்கத்தையும், ஆவலையும் முகத்தினாலும், பார்வையாலும் வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

ராஜு :—அக்கா! சாமிக்கு புத்தியே இல்லேக்கா! நாம்ப எத்தனெ வேண்டினோம், பாடினோம். எது சேஞ்சாலும் காசு குடுக்கல்லயே. இனிமே சாமியெ கேக்கவே வாண்டாம் அக்கா!

வாஸந் :—ஆமாம் ராஜு! சாமியுமாச்சு; பூதமும் ஆச்சு. பட்டாசு நெனவுலே, இன்னிக்கி பள்ளிகூடத்துலே சரியா பாடம் வாசிக்கலேன்னு வாத்தியாரம்மா அடிச்சா. அப்பகூட எனக்கு சாமி மேலேதான் கோவம் வந்துது. (வீதியில் பார்த்துவிட்டு அலறி பயந்தபடியே) ஐயையோ! ராஜு! எங்க வாத்தியாரம்மா வராடா. நான் உள்ளே பூட்றேன். அப்பாகிட்ட சொல்லராப் பலெ இருக்குடா!

இதற்குள் வாத்தியாரம்மா படி ஏறி விட்டாள். வாஸந்திகா பயந்து கொண்டு ஓடுவதைப் பார்த்ததும், நகைத்துக் கொண்டே "வாஸந்திகா! ஓடாதே; நில்லு. நில்லு. இப்ப உன்னெ அடிக்க நான் வரல்லெ. பயப்படாதே; இங்கே வா!" என்றாள். வாஸந்தி பயந்து நடுங்கியபடியே மிரள மிரள விழித்துக் கொண்டு மெல்ல நடந்து வந்து,

"டீச்சர்! நாளெக்கி பாடத்தை நன்னா படிச்சுட்றேன். எங்கப்பாகிட்ட சொல்லாதெங்கோ டீச்சர்! அப்பா அடிப்பா. (கண்ணில் ஜலம் வந்து விடுகிறது. கண்ணைக் கசக்குகிறாள்.)

ராஜு :—ஆமாம் டீச்சர்! அக்கா மத்யானம் பிடிச்சு அழுதுண்டே இருக்கா! அவளெ பாத்தா எனக்கும் அழுகெ வரது.

அப்பாகிட்டே சொன்னுக்கா இன்னும் அடிச்சு புடுவா. சொல்லா தேங்கோ டீச்சர்! அக்கா! அழாதேடீ! (வாஸந்தியை கட்டிக் கொள்கிருன்.)

டீச்சர் :—(குழந்தைகளைக் கட்டித் தடவிக் கொடுத்து இருவரையும் இரு கைகளாலும் அணைத்துக் கொண்டே) குழந்தைகளே! அழாதேயுங்கள். நான் அப்பாகிட்ட சொல்லவும் வரல்லே. இனிமே ஒன்னெ அடிக்கவும் மாட்டேன். இதோ பாரு. அப்பா உள்ளே இருக்காரு?

ராஜு :—ஓ! இருக்கார் டீச்சர்! வாங்க உள்ளே அழைச்சிண்டு போறேன். என் டீச்சர் அப்பாகிட்டெ சொல்லிடுவுங்களா?

டீச்சர் :—இல்லே ராஜா! நான் சொல்லமாட்டேன்; வா— என்று கூறியதும், உள்ளே சென்ருர்கள். வாஸந்திகாவும், ராஜுவும் முன்னுல் உள்ளே ஓடினுர்கள்.

**தி**ருமூர்த்தி தையல் மெஷினுக்கு எண்ணெய் போட்டு க்ளீன் செய்து கொண்டிருந்தான். வேணி அம்மியில் துகையல் அறைத்துக் கொண்டிருந்தாள். இருவர் முகத்திலும் விசனக் களை குடி கொண்டிருந்தது. அச்சமயம் குழந்தைகள் இருவரும் "அப்பா! அப்பா! எங்க வாத்தியாரம்மா ஒன்னே தேடிண்டு வந்திருக்காப்பா! நாங்க பள்ளிக்கூடத்துலே தப்பே பண்ணலெப்பா! அடியே வாங்கலெப்பா! சமத்தா படிக்கிறேம்பா" என்று தங்கள் குறையை முன் கூட்டியே சொல்லியதைக் கேட்ட வாத்யாரம்மாளுக்கு கடகடவென்று நகைப்பு வந்து விட்டது.

**வே**ணியும் கையலம்பிக்கொண்டு எழுந்து வந்து "வாருங்கம்மா....(ஒரு பாயை எடுத்துப் போட்டு) இப்படி உட்காருங்கள்" என்ருள். மூர்த்தியும் மெஷின் துடைத்தபடியே "வரணும் குழந்தைகள் எப்படி படிக்கிரு? விஷமத்தனம் பண்ணுமெ இருக்காளா! சமத்தா படிக்கிராளா! ஒதை வாங்காமெ இருக்கிருளா" என்று கேட்கும்போது, குழந்தைகளின் முகத்தில் அசடு வழிகிறது. வாத்தியாரம்மாவின் முகத்தையே பார்த்தார்கள்.

**வா**த்தியாரம்மாள் தன் அன்பைக் காட்டி, குழந்தைகளை இரு கைகளாலும் தடவிக் கொண்டே நகைத்தவாறு "குழந்

தைகள் வெகு சமத்தா படிக்கிருர்கள். அடியே வாங்குகிற தில்லையே. அவளைப்பத்தி கவலையே வேண்டாம். இந்த வருஷம் பரீக்ஷையில் பரிசு கூட வாஸந்தி அடித்து விடுவாள் பாருங்கள்" என்று சொல்லியபோது, வாஸந்தியின் முகத்தில் அபாரமான சந்தோஷக் களை தாண்டவமாடியது. அவளுடைய இரு விழிகளும் ஆநந்தத் தடாகம்போல் ப்ரகாசித்தன. தன் பெற்றோரையும், சகோதரனையும் ஒரு முறை பார்த்தாள். வாத்தியாரம்மாவைப் பார்த்தாள். "டீச்சர்! டீச்சர்! எனக்கா டீச்சர் ப்ரைஸ் வரப்போறது?" என்று ஆவலே வடிவாகக் கேட்டாள்.

டீச்சர் :—ஆமாம். நீ நல்ல அக்கரையொடெ படிச்சேன்னுக்கா கட்டாயம் ப்ரைஸ் வரும். இன்னும் சமத்தா படிக்கணும் தெரியுமா!....சரி. நான் வந்த காரியம் வெகு முக்கியமும் அவசரமுமானது. என் சினேகிதை யொருத்தி வெளியூரிலிருந்து வந்திருக்கா. அவள் நாளைக் காலே 10 மணிக்கு புறப்படும் ரங்கோன் கப்பலில் போகணும். அவசரம். இன்னிக்கித்தான் சில துணிகள் வாங்கினு; அதை தைத்துக் கொண்டு போகணுமாம். நீங்க எப்படியாவது காலே எட்டு மணிக்குள் தைத்துக் கொடுக்க முடியுமா? நாலு பாவாடை, நாலு கவுன், 8 சொக்கா, ஆறு ஜாகெட்டு, மூன்று ட்ராயர் இவைகள்தான். ஒரே இரவில் தைப்பது கஷ்டந்தான் தெரியும். அவசரம். வேறு இடங்களில் விசாரித்ததில் மூன்று நாள் அவகாசம் வேணும் என்ருர்கள். அதனுல் இங்கு வந்தேன்.

இச் சொல்லைக் கேட்ட உடனேயே வேணியின் இதயத்தில் அவளை யறியாத ஒரு சந்தோஷக் கொந்தளிப்பு, ஒரு விகசிதம், முகத்தில் ஒரு சோபை, கடவுள் காட்டிய வழியை எண்ணி ஒரு தனி பக்தி இத்தனையும் ஏக காலத்தில் உதயமாயிற்று. மூர்த்தியின் உள்ளத்தில் இதைப்போன்ற எண்ணங்கள் பளிச்சென்று தோன்றியபோதிலும் "இத்தனையும் எப்படி ஒரே இரவில் தைத்துக் கொடுக்க முடியும்? வாக்கு நாணயம் தவருது செய்து முடிக்க முடியுமா?" என்ற பெருங் குழப்பமும் சேர்ந்தது.

குழந்தைகளின் கண்களில் ஒரு புதிய ப்ரகாசமும், ஜீவகளையும் உண்டாயின. இதை ஒப்புக் கொள்ளும்படிக் கெஞ்சுவது

போன்ற உணர்ச்சியுடன் தந்தையை நோக்கினார்கள். தந்தை இவ் வேலையை முடித்துக் கொடுத்தால், தங்களுக்கு கட்டாயம் பட்டாசு கிடைக்குமென்கிற பேராவல் மனத்தில் கடலைப்போல் பொங்கி எழுந்தது.

வாஸந்திகா, ராஜுவின் காதோடு "அர்ப்பீ! சாமி அப்பாவை ஒத்துக்கும்படி பண்ணணுமே. பண்ணுவாராடா?" என்றாள். ராஜுவும் "அக்கா! நாம்ப நேத்தி சாமியெ வேண்டிண்ட மோன்னோ! அதுனாலெதான் இப்போ துணி வந்துது. நாம்ப இன்னும் சாமியெ வேண்டிக்கிவோம். அப்பா ஒத்துக்குவார். கண்ணை மூடிண்டு வேண்டிக்கலாம்." என்று குசு குசுவென்று கூறிக் கொண்டே கண்ணை மூடிக் கொண்டு கையைக் குவித்தவாறு "சாமி! எங்கப்பாவெ இந்த துணியெ தைக்க ஒப்புக்கச் சொல்லு. சாமீ! நீ நல்லவரோன்னோ?" என்று தனியாகச் சொல்வதை முதலில் யாரும் கவனிக்கவில்லை.

ஆனால் அடுத்த நிமிடமே மூர்த்தி கவனித்து விட்டான். குழந்தைகளின் ஆவல் எவ்வளவு வேகத்துடன் பொங்குகின்றது என்ற எல்லையை அவன் இதயம் அறியும்போது அவன் மனத்தில் இருந்த சிறிது குழப்பமும் விலகிப்போய் விட்டது. எப்பாடாவது பட்டு இரவு முற்றும் கண் விழித்துத் தைத்துக் கொடுத்து குழந்தைகளின் ஆவலைப் பூர்த்தி செய்வது என்று முடிவு கட்டிக் கொண்டான்.

"அம்மணி! ஏதோ என்னால் முடிந்த வரையில் இரவு முற்றும் வேலை செய்து முடிக்கப் பார்க்கிறேன். அப்படி இரண்டொன்று நின்று விட்டால் மன்னிக்க வேண்டும். அளவுத் துணிகள் இருக்கிறதா?" என்றான்.

இச் சொற்கள் குழந்தைகளின் காதில் பட்டவுடனே அவர்களின் உள்ளத்திலிருந்து எழுந்த ஓர் அபூர்வ உணர்ச்சியின் சக்தி வேகத்தை அளவிடவே முடியாது. ஒரு குதி குதித்தார்கள். சாமியை வேண்டியதற்குப் பலன் கை மேல் கிடைத்து விட்டதாக ஓர் பெரும் நம்பிக்கையான பக்தி இதயத்தில் ஊன்றியது.

"ராஜு! நான் வேண்டிண்டதாலேதான் சாமி சீக்கிரம் வரம் குடுத்துட்டார்." என்றாள் வாஸந்தி. ஆனால் ராஜு அதற்கு

இசைவானு? "இல்லேக்கா! சின்னப் பையன் நான் வேண்டின் டேன். அதான் சாமிக்கும் மனசு எறங்கித்து" என்றான். இவர்களின் குட்டிச் சண்டையையும் மூர்த்தி கடைக் கண்ணால் கவனிக்காமலில்லை.

உடனே வாத்தியாரம்மாள் தன்னோடு வந்த வேலைக்காரி கொண்டு வந்த மூட்டையை அவிழ்த்து புதுத் துணிகளையும், பழைய அளவுத் துணிகளையும் முறையே காட்டினாள். மூர்த்தியும், அவைகளை சரியாக கவனித்துக் கொண்டான். குழந்தைகளின் மனது ஒரு நிலையுள்ள தல்ல வென்பதற்கு அத்தாட்சி வாஸந்தியும், ராஜுவும் பகவத் பக்தியிலிருந்து குட்டிச் சண்டைக்கு வந்து, அதிலிருந்து இந்தப் புதிய துணிகளின் மேல் பாய்ந்து விட்டதே போதும். அவர்கள் நிதியைக் கண்டவர்கள்போல் இந்த உடைகளினால் கவரப்பட்டு ஓடி வந்தார்கள். குட்டிச் சண்டை மறைந்தது. ராஜு "பாத்தியா அக்கா! என்ன அழகு பாத்தியா?" என்று கூற, இருவரும் வினோதக் காட்சியில் மூழ்கி விட்டார்கள்.

வாத்தியாரம்மாள் உடைகளைக் கொடுத்துவிட்டு நாளைக் காலை எட்டு மணிக்கு வருவதாகச் சொல்லி "குழந்தைகளே! நான் வருகிறேன்" என்று கூறிப் போய்விட்டாள். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற பழமொழியின் உண்மை இந்த இளந் தம்பதிகளின் உயர்ந்த எண்ணத்தில் உயரிய இடம்பெற்றுப் பதிந்தது.

வாஸந்தியும், ராஜுவும் ஏக காலத்தில் தந்தையின் காலைக் கட்டிக் கொண்டு "அப்பா! நாங்க சாமியெ வேண்டினோம்பா; அதான் சாமி வேலெ குடுத்துட்டார். இனிமே எங்களுக்கு பட்டாசு உண்டாப்பா?" என்றார்கள். மூர்த்தியின் இதயத்தில் ஆநந்தம் பொங்கியது. "கண்மணிகளே! சாமியெ இப்படிதான் இடை விடாமெ பக்தி பண்ணுங்கோ; எல்லாம் உண்டாகும். சரி! நீங்க விளையாடப் போங்கோ; நான் துணி தைக்கணும். இங்கே தொந்தரவு செய்யக் கூடாது. தெரியுமா?" என்றான். உடனே குழந்தைகள் துள்ளிக் குதித்து ஓடி விட்டார்கள்.

மூர்த்தி துணிகளை வெட்ட உட்கார்ந்தான், "வேணி! விளக்கு நிறைய எண்ணெயைப் போட்டு ஏத்தி வை. நீயும் கொஞ்சம்

சகாயம் செய்யணும்'' என்றான். அப்போது அவன் தொனியில் ஒரு புதிய ஜீவன் த்வனித்தது. வேணியும் சந்தோஷத்துடன் "இதுக்கு சொல்லணுமா: நான் காத்துண்டிருக்கேன்'' என்றாள். புருஷனும், மனைவியும் ஒற்றுமையாக வேலை செய்ய வாரம்பித்தார்கள். மூர்த்தி மெஷினில் தைக்க, வேணி துணிகளை அளவு ப்ரகாரம் கத்தரித்து ஒட்டல் ஒட்டி வைத்து உதவி புரியவாரம்பித்தாள்.

## 6

மூர்த்தியின் தாயாருக்கு ஒருவிதமான வாதத்தின் கொடுமையால் நடக்க முடியாது நகர்ந்து கொண்டே செல்லும் கதி ஏற்பட்டு விட்டதால் பட்டின வாஸத்தில் இச் சிறிய விடுதிக்குள் தானும் கூட விருந்து மகன் படும் கஷ்டத்துடன் இன்னும் கஷ்டம் கொடுக்க ப்ரியப்படாமல் கிழவி, கிராமத்தில் இருக்கும் தனது சகோதரியின் வீட்டில் தான் இருப்பதாகவும், மாதா மாதம் ஏதேனும் கொடுத்தனுப்பியும், அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டுமிருந்தால் போதுமென்றும் கூறிச் சென்று விட்டாள்.

மூர்த்தி தமக்குச் சாப்பாட்டுக்கு இல்லை எனினும் மாதம் எப்படியாவது கஷ்டப்பட்டுத் தன் தாயாருக்கு 5 ரூபாய் சேமித்தும், கடன்பட்டும் அனுப்பி வந்தான். இரண்டு மாதத்திற்கொரு முறை தாயாரைப் பார்த்துவிட்டு வருவான். இப்போது அடியோடு வருவாய் குறைந்துவிட்டதன் பயனால் ஆறு மாத காலமாய் ரயில் செலவுக்குப் பணம் அகப்படாமல் தாயாரைப் போய் பார்க்கவே முடியாது தவிக்கிறான். தான் ரயிலுக்குச் செலவு செய்வதை அவர்களுக்கு அனுப்பி வைத்தால் உபயோகமாயிருக்கும் என்ற எண்ணத்துடன் நாட்கள் கடந்து விட்டன.

இன்று இந்த வேலை வந்தவுடனே மூர்த்தியின் மனத்தில் குழந்தைகளின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்குண்டான சந்தோஷத்தை விடத் தன் தாயாரை எப்படியாவது போய் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற பேராவலும், தாயின் பிம்பம் கண்முன்பு தெரிவதுபோலானத் தோற்றமும் உண்டாயின. வேணி குழந்தைகளுக்குச் சாப்பாடு போட்டுப் படுக்க வைத்தாள். புருஷனுக்கு எழுந்து வந்து இலையில் உட்கார்ந்து சாப்பிடும் நேரமும் வீணுகாமல், வேணியே கலந்து அவன் கைத்துக்கொண்டிருக்கும்போது வாயில் போட்டவாறு, "என்ன! நாளைக்கு கார்த்திகையானதும் மறுநாள் முதலில் அம்மாவைப் பார்த்துவிட்டு வரணும். நானும் பார்த்து ரொம்ப நாளாய்விட்டது. எனக்கும் பார்க்கவேண்டும் போலிருக்கு" என்ருள்.

ஒரே சமயத்தில் மூர்த்தியின் கால்கள், கைகள், கண்கள், மூளை முதலிய எல்லாம் தையல் வேலையில் உழைக்கின்றன. வாயில் போட்ட சாதத்தை வாய் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. மனத்திலோ கிராமத்திலிருக்கும் தன் ஆருயிர் அன்னையின்மீது மோதும் அன்பு அலைகள் அடிக்கின்றன. தான் நினைக்கும் நினைப்பையே தன் மனைவியும் கேட்டதால், மிக்க மகிழ்ச்சியுடன் "வேணீ! நானும் அதையேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதே நினைவாயிருக்கிறது. அதோடு சென்ற சில மாசமாய் 5 ரூபாய் அகப்படாததால் மூன்று ரூபாய் அனுப்பினேன். அது அவர்களுக்குப் போதல்லையாம். அதனுல் ஒரு மாதிரியாய் கோவித்துக் கடிதம் எழுதி இருக்கிருர்கள். 'தள்ளாத கிழவியான அவளை ஏதாவது உபத்திரவம் செய்கிருர்களோ அல்லது ஆகாரம் குடுக்காமல் பட்டினி போடுகிருர்களோ! என்றெல்லாம் என் மனது அலைகிறது. ஆகையால் நாளை மறு நாள் போய் வருவோம்" என்று சாந்தமாகக் கூறும்போது, தாயின் பாசத்தினுல் மூர்த்தியின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. ஆதிகால நினைவு முற்றும் மூளையில் சுற்றவாரம்பித்தது.

வேணி தானும் சாப்பிட்டு வேலை செய்ய உட்கார்ந்தாள். பூர்ணமிக்கு முதல் நாளாகையினுல் நிலவு, உலகத்தையே பால் மயமாக்கி விட்டது. இரவின் இயற்கைத் தேவி வெகு குதூகல

மாக சிம்மாசனத்தில் வீற்று செங்கோல் செலுத்துகிருள். இராக் கால பக்ஷி இனங்கள் தம்தம் உத்ஸாகப்படிக்குப் பாடிக்கொண் டிருக்கின்றன. சிறிது தூரத்திலிருக்கும் கடல் மதி மன்னனைக் கண்டு பொங்கிப் பூரித்துப் பேராரவாரம் செய்து இரைச்சலிடுகின் றது. அந்த இரைச்சலாகிய சங்கீதத்திற்கு ஜீவனுடன் கூடிய தம்பூரா ச்ருதி கூட்டுவது போன்று மூர்த்தியின் தையல் மெஷின் த்வனிக்கின்றது.

தெருக்கோடியிலுள்ள விநாயகர் கோயிலின் கடியாரமும், பெரிய மணியும் இராக்காலம் உருண்டு செல்லும் மார்க்கத்தை அவ்வப்போது அளந்து காட்டிக் கொண்டே செல்கின்றன. இரவு மணி ஒன்று ஆனதை அந்த மணி விளக்கியபோதுதான் வாஸந்திகா தூக்கத்தில் "ராஜு! பட்டாசு பொட்டளம் பாத் தியா! மத்தாப்பூ பாத்தியா! நாம்ப ரெண்டு பேரும் சுடலாண்டா: சண்டெ போடாதேடா: சாமி நல்லவர்டா! நமக்கு பட்டாசு குடுத்தார்" என்று வாய்ப் பிதற்றிஞள்.

அந்த பிதற்றல் தம்பதிகளின் கை வேலையின் ஊக்கத்தை அதிகரிக்கச் செய்து, கையில் இன்னும் வேகத்தைக் கொடுக்கும் சக்தி வாய்ந்த சாட்டைபோலாயிற்று. வேணி தடுக்க முடியாத தூக்கம் வந்து உபத்திரவிப்பதை அவ்வப்போது தடுத்துக் கொண்டே தன் வேலையைச் செய்து கொண்டிருந்தாள்.

அச்சமயம் அவ்வறைக்கு வெளியில் பைசாசம் கத்துவது போன்ற ப்ரம்மாண்டமான ஓர் சப்தம் மெஷினின் ஓசையையும் தாக்கிக்கொண்டு வந்து இவர்கள் செவியில் கேட்டதும் இருவரும் நடுங்கியபடியே அதைக் கவனித்தார்கள். இவர்கள் காதில் விழுந்த சப்தமாவது வீட்டுக்காரக் கிழவியின் குரல் என்று தெரிந்தது. "சனியன் பிடித்த எழுவு. ராவெல்லாம் தூங்கவிடாமெ கர்ரா புர்ராவென்னு மெஷின் தலைவேதனை பண்ணிண்டிருந்தா எப்படி தூங்குவது? மூணு நாளா ஒடம்பு சரி இல்லாமே கடக்கும் என் பேரன் இந்த எழவெடுத்த ஓசையாலே தூக்கமே வராமே தவிக் கிருன். தூக்கம் வராத்தாலே ஜுரம் அதிகமாறது. ஏ திரு வேணீ! திருவேணீ! கதவெத் தரடீ!" என்று கூறி கதவைப் பல மாக இடித்தாள்.

இதைக் கேட்ட வேணி அலறியடித்துக்கொண்டு எழுந்து போய் கதவைத் திறந்து பயத்தோடு நின்று "என்ன பாட்டீ!" என்றாள். கிழவி பின்னும் தூபம் போட்ட பிசாசுபோல் எழும்பிக் குதித்து தன் பொக்கை வாயை ஆட்டி அறைத்துக் கையை நீட்டி மடக்கி, நிர்த்தனம் செய்தவாறு "எம் பாட்டியா! இந்த பாழும் ஓசை எம் பேரனெ கொண்ணுபுடும்போ லிருக்குதே. அப்போ பிடிச்சு நானும் பாக்கறேன், நிக்கற வழியே காணம். எனக்கும் பொறுக்கமுடியாமே வந்தேன். அடே மூர்த்தி! நிறுத்தப்போ றயா இல்லையாடா!" என்று அலக்ஷியமாய்க் கேட்டாள்.

வேணி :—(மிகுந்த பயபக்தியுடன்) பாட்டீ! இத்தனை நாள் மெஷின் துருப்பிடித்துத்தானே கடந்தது. ஏதோ பகவான் க்ருபையால் வந்தவேலை இன்னிக்கி ஒருநாள் தானே பாட்டி! நான் தான் கதவெ சாத்தி இருக்கேனே அதுவா ஒங்களுக்கு மெத்தெ மேலே ஓசை கேக்கறது? பாட்டீ! தயவு பண்ணி மன்னிக் கணும்.

கிழவி :—என்னடீ பெரிசா அளக்கரே? தினம் இந்த மாதிரி சுத்தி சுத்தி தலைவேதனெ பண்ணலியேன்னு கொறையா இருக்கோ! வீட்டுலெ சிக்குக்காரா இருக்கறதுகூட தெரியாமெ என்ன அமக்களண்டீ! போது விடியறதுக்குள்ளே குபேரனு பூடப் போறயோ! நோயாளி கஷ்டப்பட்றான். இனுமே சுத்தா தேங்கோ.

இதற்குள் பக்கத்து வீட்டுக்காரன் அங்கு ஓடி வந்து "இதென்ன தலைவேதனை! ராத்திரி எல்லாம் ரோதனையா யிருந்தா எப்படி தூங்கறது. வீட்டிலே ப்ரஸவிச்சி இருக்கறவளுக்கு தலை வேதனை பொறுக்க முடியலேன்னு கத்ரா! தூக்கம் முழிச்சு தலை நோவு கண்டு ஜன்னி வந்துடுத்துன்னா என்ன பண்றது? வாசல் லேந்து ரெண்டுதரம் கூப்டேன். இந்த பாழாப்போன மெஷின் ஓசேலே எதுதான் காதுலே விழும்?" என்று அவர் சொல்லும் போது மூர்த்தியின் இதயத்தில் குத்துவதுபோலிருந்தது.

மூர்த்தி :—பெரியம்மா! ஐயா! நான் பரம ஏழேன்றது ஒங்களுக்குத் தெரிந்த விஷயம். எனக்கு இந்த மாசம் அசலே வரும்படி இல்லாமே தவித்தேன். கடவுள் க்ருபை பண்ணி இந்த

வேலே குடுத்தார். இன்னிக்கு ஒருநாள்தான் பொறுத்துக்கணும். மன்னிக்கணும். விடிஞ்சா கார்த்தி பண்டிகை. கையில் காலணு இல்லே. இதை செய்து குடுத்தா காலணு வரும்னு பொழைப்பெ உத்தேசிச்சு செய்யறேன்.

கிழவி:—போடா! போ! நோவாளியும், ப்ரஸவிச்சவளும் சாகரான்னு என்னென்னமோ அளக்கறியே. அவா செத்துத் தொலேச்சா அது நல்லதோ! இதோ பாரு....இந்த பஞ்ச பாட்டு பாடாதெ. ஓணம்னு மெஷினெ தூக்கிண்டு கொல்லெப்புறம் போட்டுண்டு வேலே செய். இங்கே அடம் செய்யாதே!—என்று அப்பீல் கோர்ட்டு முடிவுபோல் கூறினுள். பக்கத்து வீட்டுக்காரனும் இதையே ஆமோதித்து மண்டையை ஆட்டினுன்.

இதற்குமேல் அந்த ஏழை தம்பதிகள் என்ன செய்வார்கள் பாவம்! தங்களைப் படைத்த பூமாதேவியைப் பார்த்துப் புலம்புவதை விட வேறு தெரியாதவர்களாய் தலே குனிந்தார்கள். இதை இரவோடிரவு தைத்துக்கொடுத்தால் காலணு காசு வரும் என்ற ஆவலுடன் இருந்த இவர்களுக்கு பெருத்த குழப்பமும் ஏமாற்றமும் ஆகிவிட்டது. இம்மாதிரி தடங்கல் வந்துவிட்டதால் காலே குறித்த நேரத்திற்குள் தைத்துக்கொடுக்க முடியுமா! முடியாமற் போய் நாணயம் தப்பி விடும்படியாகி விடுமோ!" என்ற பயமும், கலக்கமும் சூழ்ந்து கொண்டுவிட்டன.

## 7

தம்பதிகளிருவரும் கொல்லேப்புற மிருக்கும் இடத்தைப் போய்ப் பார்த்தார்கள். அங்கு ஒரே அழுக்கும், குப்பையும், ஒட்டடையும் நிறைந்து கிடந்தது. "இந்த இடத்தில் நல்ல துணிகளே எப்படி போட்டுத் தைப்பது? அழுக்காகி விட்டால் என்ன செய்வது?" என்ற கலக்கத்துடன் வேணி கைக் கெட்டிய வரையில் ஒட்டடை யடித்துப் பெருக்கி

விட்டுப் பாயை விரித்தாள். பின்னர் தம்பதிகளிருவருமாக மெஷினைத் தூக்கிக் கொண்டு வந்து போட்டுக் கொண்டு தைக்க உட்கார்ந்தார்கள்.

**கா**ற்றில் விளக்கு நிற்காமல் குப் குப் என்று புகைந்து எரிந்து அணைந்துபோய் விடுகிறது. எத்தனை தரம் தீக் குச்சியைக் கிழித்து ஏத்தியும் பத்து நிமிடங்கூட சேர்ந்தார்ப்போல் தைக்க விடாமல் அவிந்துபோய் விடுவதால் இவர்கள் மனம் உடைந்து போய் விட்டது. உள்ளே தனியாக இருட்டில் படுத்திருக்கும் குழந்தைகள் எங்கே எழுந்து பயந்து அழப்போகிறார்களோ என்ற ஒரு பெரிய பயம் அடிக்கடி தோன்றி வதைக்கிறது. விளக்கு ஏத்தி ஏத்தி வத்திக் குச்சியும் ஆய் விட்டது. இன்னும் இரண்டு மூன்று குச்சிகள்தான் பாக்கி இருக்கின்றன. இதுவும் ஆய் விட்டால் என்ன செய்வது? இந்த அர்த்த ராத்திரியில் வத்திக் குச்சிக்கு எங்கே போவது? "ஈசா! இதென்ன சோதனை!" என்ற வேதனையுடன் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

மூர்த்தி :—வேணி! நமக்கு தொழில் க்ஷீணமாய் விட்ட போதிலும் ஆதியில் கிடைத்த நாணயக்காரன் என்ற பெரும் நல்ல அபிப்பிராயமும் க்ஷீணமாகல்லே. இப்போ அதுவும் போயுடுமோ என்று பயமா யிருக்கே. இப்படி விளக்கு அவிஞ்சா என்ன செய்றது?

வேணி :—நானும் அதுதான் யோசிக்கிறேன். கஷ்டம் மறைய தொழிலைக் காட்டின கடவுள் இப்படி எல்லாம் சோதனையும் பண்ணுவார்னு நான் நெனக்கல்லே. இப்படி அணைஞ்சா இருட்டுலே என்னமா தெக்க முடியும்? காலையிலெ அந்தம்மா வந்தா என்ன சொல்றது? பாதிகூட தெச்சாகல்லெயே.

மூர்த்தி :—வேணி! குழந்தை அழராப்பலே சப்தம் கேக்கறது. போய் பாரு. இருட்டிலே பயந்துக்கப் போரது—என்றான். விளக்கு அணைந்து விட்டது. மூர்த்தி தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். வேணி எழுந்து சென்றாள்.

## 8

இருட்டில் தூங்கும் குழந்தைகளில் ராஜு விழித்துக் கொண்டு எழுந்து பார்த்தான். எங்கும் இருட்டும், ஜன்னலால் தெரியும் சிறிது நிலவுவெளிச்சம் மட்டுமே இருப்பது கண்டு பயந்துபோய் வீறென்று அழுது கொண்டே நிலை தெரியாமல் எழுந்து ஓடி வந்து முட்டிக் கொண்டும் சுவரில் இடித்துக் கொண்டும் கதவருகில் வந்தான்.

வீட்டுக்காரக் கிழவி பத்ரகாளித் தாயி ஆவேசத்துடன் படுத்தபடியே "என்னடா சனியன் புடிச்ச எழுவா இருக்கு? ஏன்டா அழரே? ஒங்கம்மாவெ பூதம் முழுங்கிப்புடலெ. மெஷின் ஓசை போச்சுன்னுக்கா நீ பல்லவி பாட ஆரம்பிச்சுட்டயோ! ஐயயோ உபத்திரவமே! அடீ வேணீ! வேணீ! இதோ பாரு ஒஞ் செல்லம் ராக ஆலாபனெ செய்யறது. வந்து சமாதானப் படுத்து" என்றாள்.

அதே சமயம் வேணி அலறிக் கட்டிக்கொண்டு ஓடி வந்து குழந்தையை வாரியணைத்து எடுத்துத் தோள்மீது சாத்திக் கொண்டே "கண்ணு! ராஜு! அழாதேடா சாமீ! என்னப்பா வோன்னே! பாட்டி திட்டுவா. அடிப்பா! நீ அழாதேடா ராஜா!" என்று கொஞ்சியவாறு சமாதானம் செய்தாள்.

குழந்தை திக்கி அழுதவாறு "அம்மா! இருட்டுலே எங்களெ உட்டுட்டு எங்கே பூட்டே? அப்பா எங்கே?....பயம்மா இருக்கே." என்று அழுதான். அவனைத் தோள்மீது அணைத்துக் கொண்டே உள்ளே போய் படுக்க வைத்துத் தூங்கச் செய்தாள்.

## 9

மைதிலியின் பொழுது போக்கிற்கு உயர்ந்த வகையில் நீதிகளையும், உலகானுபவங்களையும், சமூக சீர்திருத்தங்களையும் தேச பக்தி, தெய்வ பக்தி, முதலியவைகளையும் போதிக்கும் பேராசிரியன் போன்ற உன்னத தமிழ் நாவல்களும், இதர புராண புத்தகங்களும்தான் உயிர்த் துணையாயிருக்கின்றன. மிஞ்சிய நேரத்தில் தன் மூத்தாரின் குழந்தைகளிடம் வெகு பக்ஷமாயும், பொறுமையற்ற தன்மையில் சமத்ருஷ்டியோடு அவர்களை வளர்க்கும் வேலையைத் தன் முழு மனத்துடன் ஓர் புனிதத் தொண்டாக எண்ணிச் செய்து வருவதில் பெரு மகிழ்ச்சி கொண்டாள்.

குழந்தைகளும் கிழத் தந்தையை விட மைதிலியையே அதிகமாக நேசித்து வந்தார்கள். கிழவருக்கு மைதிலி எந்த விஷயத்தில் எப்படி நடந்துகொண்டபோதிலும் தன் விஷயத்தில் அவள் சரியாக நடந்துகொள்ளாத குறையை அவர் பெரும் பகையாயும் கடின குற்றமாயும் மதித்து வந்தார். ஆகையால் அவர் எந்த வழியில் மைதிலியை மயக்கலாம் என்ற பெரும் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டார்.

அன்று அவர் வெளியில் போகும் ஜோரில் முகங் கழுவி, சரிகை வேஷ்டியுடுத்தி, தலைப்பாகைக் கட்டிக்கொண்டு ஜம்மென்று மாப்பிள்ளைபோல் அலங்கரித்துக் கண்ணாடியின் முன்பு நின்றார். வாயில் கட்டி இருக்கும் பல் நாற்றம் நாறியதால் அதைக் கழட்டி பக்கத்திலிருந்த பேஸின் ஜலத்தில் நன்றாகக் கழுவித் துடைத்துக் கொண்டிருக்கையில் தூரவிருந்த மைதிலி கண்ணாடியின் ப்ரதிபிம்பத்தில் இவர் பல்லைத் துடைப்பதை யறிந்து, ஓட்டமாக ஓடிவந்து கிழவரின் கையைத் தட்டிவிட்டாள்.

பல் வரிசைகளில் ஒன்று தபாரென்று கீழே விழுந்துவிட்டதும் மைதிலி அதைக் கையில் எடுத்துக்கொண்டு கிழவரின் முகத்தைப் பார்க்கிறாள்; பல்லைப் பார்க்கிறாள். வயிற்றில் நெருப்பு வைத்ததுபோல் பற்றி எரிகிறது. சோகத்தில் முதிர்ந்த ஒரு சிரிப்பு அவள் முகத்தில் ஜ்வலித்தது. கடகடவென்று சிரித்துக்

கொண்டே பல்லைத் தூக்கிக்கொண்டு இரண்டடி நகர்ந்து "தாதா! பேஷ்! பல்லு வெகு அழகா இருக்கே!" என்றாள்.

கிழவருக்குக் கோபம் நான்காவது அவதாரம்போல் பீறிக் கொண்டு வருகிறது. தான் பரம ரகஸ்யமாக வைத்திருந்த இந்த பல்லை இவள் எப்படியோ பார்த்து விட்டாளே என்ற வேதனையும் வெட்கமும் சூழ்ந்து கொண்டன. கிழவர் மற்றொரு செட்டு பல்லை வாயில் மாட்டிக் கொண்டு மைதிலியைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தார். அவள், கையிலகப்படாமல் சுற்றி ஓடிய வாறு "தாதா! ஒரு வரிசைப் பல்லெ ரொம்ப அழகா இருக்கே" என்று மீண்டும் வயிற்றெரிச்சலுடன் நகைத்தாள்.

இதற்குள் கிழவரின் பெண் அங்கே ஓடி வந்து "என்னம்மா! அது என்னது எனக்குக் காட்டு. அப்பா என்ன வாங்கி குடுத்தா?" என்று கேட்டது. கிழவருக்கு இச்சிறுமி வந்ததும் பின்னும் பயமும், வெட்கமும் பிய்த்துக் கொண்டு வந்து விட்டன. ஒத்தைப் பல் வரிசையுடன் "அடீ மைதிலீ! வான்டாம்! வான்டாம்; சொல்லாதே....இப்படி குடுத்துடு. ஊம்....தெ. சனியனே மீனுஷி! தூரப் போய்டு. இல்லாட்டா அடிப்பேன். அம்மா கைலே ஒண்ணுமில்லே" என்று கூறியவாறு மகளை இழுத்துத் தள்ளினார்.

மைதிலி "தாதா! குழந்தையை ஏன் தள்றங்கோ! மீனாக்ஷி! இதோ பாரு ஒங்கப்பாவின் பல்லு வரிசை; வேறொண்ணு மில்லே." என்று காட்டி விட்டாள். மீனாக்ஷி கட கடவென்று சிரித்துக் கொண்டே தகப்பனாரையும் பல்லையும் பார்த்துவிட்டு "ஏம்பா! ஒனக்கு பொக்கை வாயா! நெஜம் பல்லு கடயாது? அதான் நீ முறுக்கு சீடெ எல்லாம் சாப்படமாட்டெங்கறே....அடே முத்து! முத்து! இதோ பார்டா அப்பாவின் பல்லு." என்று தன் அண்ணனைக் கூவி அழைத்துக் கொண்டே ஓடினாள். கிழவர் ஆனை பலத்துடன் ஓடி வந்து மீனாட்சியை அடித்து, இழுத்துத் தள்ளிவிட்டு, பல்லை லொடக்கென்று வாயில் போட்டுக் கொண்டு "கடிக் கழுதை! இதெ வெளிலே சொன்னாக்கா மண்டெயெ ஒடச்சுப்புடுவேன். ஜாக்ரதை" என்று கூறிவிட்டு, மைதிலியை முறைத்துப் பார்த்துக் கொண்டே மீண்டும் கண்ணாடியி னருகில் வந்தார்.

அதே சமயம் தபால்காரன் ஒரு பார்ஸலைக் கொண்டுவந்து "சார்! பார்சல்" என்றான். இந்த குரலைக் கேட்டதும் கிழவர் அபாரமான சந்தோஷத்துடன் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தார். இதற்குள் மைதிலி ஒரே பாய்ச்சலாய் தபால்காரனிடமிருக்கும் பார்ஸலை வாங்கிப் பார்த்தாள். அதன்மேல் "மன்மத பாண சஞ்சீவி" என்ற பெயர் காணப்பட்டதும், வயிற்றில் பகீரென்ற சங்கடமும், தாங்கமாட்டாத வெறுப்புடன் கலந்த கோபமும் உண்டாகியது. கிழவரையும், மருந்தையும் உற்று உற்றுக் கவனித்தாள். கடகடவென்று வெறுப்பும், பரிகாஸமும் கலந்த ஒரு நகைப்பு நகைத்து விட்டு "தாதா! மறு ஜென்மம் எடுக்காமலேயே சின்னப் பிள்ளை, யௌவன வாலிபனாகப் போகிறாப்பலே இருக்கே!" என்றாள்.

இதற்குள் கிழவர் இவள் மருந்தை வாங்கிக்கொண்டு விட்டதைக் கண்டு கோபத்துடன் தபால்காரனை முறைத்துப் பார்த்தபடியே கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டுத் திரும்பினார். அப்போதுதான் மைதிலியின் நகைப்பும்,அந்த குறும்பான பாணம் போன்ற வார்த்தைகளும் காதில் பட்டன. ஆத்திரத்துடன் "ஹி ஹி ஹி!" என்று நங்கு காட்டும் முறையில் சிரித்துக்கொண்டு "மோரக் கட்டையைப் பாரு. தே....வெளையாடாதே. மரியாதையா இப்படிக் கொடுத்து விடு. ஐயோ! பிரிக்காதே. மைதிலீ! மைதிலீ! சொல்வதைக் கேளு. பிரிக்காதே. அது என்னுதில்லை. சேஷப்பருடையது" என்று கூறிக்கொண்டே, மைதிலியின் கையிலிருந்து பிடுங்கத் தாவினார்.

இதற்குள் மைதிலி சிட்டுக் குருவி போல் பறந்து வேறு இடம் ஓடியவாறு, பார்சலைப் பிரித்து புட்டியைக் கையில் எடுத்துக் கொண்டாள். கிழவரும் விட்டபாடில்லை. ஓடி வந்தார். அந்த கூடத்தை மூன்று முறை ஓடி ஓடி மைதிலி சுற்றினாளே யன்றி மருந்தைக் கொடுக்கவில்லை.

கிழவரும் விடாமல் சுற்றி மைதிலியைப் பிடித்துக் கையிலிருந்த புட்டியை இழுக்கப் போனார். மைதிலி கண்களில் தீப்பொறி பறக்க "என் கையை விடுங்கள். மன்மத பாண சஞ்சீவியா

வேணும்? என் மன்மதனே நேரில் வந்து பாண ப்ரயோகம் செய்தால் இன்னும் இளமையும், யௌவன சுகுமாரமும் வந்துடுமே. இந்த கிழத்திற்கு மருந்து ஒரு கேடா?” என்று கூறியபடியே மருந்து புட்டியை விசி எறிந்தாள். இவள் மனத்தில் சிதறி அலையும் வேதனையைக் காட்டுவதுபோல் புட்டி சுக்கல் நூறாக உடைந்து மருந்து சிதறியோடியது. மைதிலி கையைத் திமிறிக் கொண்டு வேறு புறம் சென்று நின்றாள்.

கிழவரின் கோபத்தைக் கேட்கவேண்டுமா! “ஆஹ்ஹா! என்ன செய்தே?” என்று உறுமிக்கொண்டு, மைதிலியை அடிப்பதற்கு கையை ஓங்கிக்கொண்டு வந்த சமயம் கிழவரின் மூத்த மகன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிட்டவன், தற்செயலாகப் பார்த்து, புத்தகத்தைப் போட்டுவிட்டு ஓடி வந்து தகப்பனாரைத் தடுத்து “எம்பா! வெறும்மெ சித்தியை அடிச்சு கொல்றெ? ஐயோ பாவம்! அவளுக்கு யார் இருக்காப்பா! அவ அழறா பாரு.” என்று தடுத்தான்.

கிழவரின் கோபம் இன்னும் பொங்கியது. “ஆமாண்டா! தறிதலைப் பயலே! நீ சிபார்சுக்கு வந்துட்டயோ! போடா வெளியே” என்று பையனின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிய தள்ளில் அவன் உருட்டி யடித்துக் கொண்டுபோய் விழுந்தான். கிழவரின் ஆத்திரம் சரியான உச்ச ஸ்தாயியை எட்டி விட்ட சமயம் சேஷப்பர் தொந்தியைத் தடவிக்கொண்டே “ஏண்டா வேதாசலம்! பார்சல் வந்துடுத்தோ! தபால்காரன் இங்கே எதிருப்பலே இருந்தது. ஒனக்கு மாத்திரம் வந்ததா! எனக்குக் கூடவா?” என்று கேட்டுக் கொண்டே கூடத்தை அடைவதற்குள், கிழவர் தலையிலடித்துக் கொண்டு, வாயை மூடும்படி சேஷப்பருக்கு கையால் சமிக்ஞை காட்டிக் கொண்டே ஓடினார். அதைப் பார்த்த மைதிலிக்கு அந்த நிலைமையிலும் கடகடவென்று நகைப்பு வந்து விட்டது. பெரிய சத்தமிட்டுச் சிரித்தாள்.

அச்சமயம், அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தேவ கானம்—கந்தர்வ கானம், மானிலத்தில் மானிட வாழ்க்கையை உய்விக்கும் மகிமை கானம், வானக்குயிலின் அம்ருத நாதம்

போன்று ஒலிக்கும் இனிய கானம்—வழக்கம்போல் கேட்டது. மைதிலியின் தேகமே மயிர் சிலிர்த்தது. அவளுடைய நகைப்பு முற்றும் அந்த விநாடியே மறைந்துபோய் அவள் உள்ளத்தினின்று எழுந்த ஓர் புதிய சக்தி அவளை ஜன்னலண்டை இழுத்துச் சென்றது. முகம் ஒரே நிலையில் நின்றது. கண்கள் மெய்மறந்து ஆனந்தத்தினால் சற்று நேரம் மூடுவதும், பின்னும் திறப்பதுமான ஓர் தனிச் சுடருடன் ப்ரகாசித்தன. அவள் அனுபவிக்கும் கானமாவது—

("ஹைதுனியாமே!"—என்ற மெட்டு)

தூய்மையினாலே துன்பம் வென்றிடலாம்
துணிந் தெழுவாய் மட நெஞ்சமே!—
அச்சுதன் அருளை நம்பி (தூய்)

கடல் பெரிதெனினும் கப்பல் சிறிதெனினும்
இடர்பல வரினும் தடுத்துமுன் நீந்தியே—
கடல் கடப்பது கப்பலே (தூய்)

இந்த வெகு அருமையான பாடலை ஒரு சரணம் பாடியதும் தாழ்ந்த குரலில் "ஆமாம்; ஆமாம். கடல் மகா பெரிது. ஆழமும், கரையும் காணாதது. ஆனால் அதில் தைரியமாக ஒரு சிறு கப்பல் கிளம்பி அதைக் கடக்க முன்வருகிறது. அக் கப்பலை அப்படியே கவிழ்த்து ஆபத்துண்டாக்குவதற்கு பெரிய திமிங்கிலம் முதலிய நீர் வாழ் ஜந்துக்களும், கடல் மலை முதலியனவும் தயாராயிருக்கின்றன. அது போதாததற்குச் சில சமயம் புசலும் காற்றும் பெரு மழையுங்கூட வாட்டி வதைக்கின்றன. ஆனால் மாலுமியின் சாமர்த்தியத்தினால் கப்பல் சேதமின்றி அக் கரை சேர்ந்துவிடுகிறது. இதுதான் உலக ரகஸ்யத்தின் தத்துவம். கப்பலுக்கு மாலுமி எப்படியோ, அப்படி மனிதனாகிய கப்பலுக்கு மனமாகிய மாலுமியே அதியாவச்யம்.

**கப்பலின்** மாலுமி சிறிது அஜாக்கிரதையாக இருப்பானாயின், கப்பல் பெரும் ஆபத்துக்கு ஆளாவதோடு அக்கப்பலை ஆதாரமாக நம்பி, ஏறியுள்ள ஜனங்களுக்கும், பண்டங்களுக்கும்

பேராபத்து விளைந்துவிடும். அதேபோல் மனித வாழ்க்கைக் கப்பலை நடத்திச் செல்லும் மாலுமி போன்றுள்ள மனது சற்று அஜாக்ரதையாய், ஆசா பாச மோகங்களாகிய விபத்துக்களில் சிக்கிவிடுமாயின், பேராபத்துக்கும், விபரீத பாபக் குவியலுக்கும் பங்குதாரராகவும், துன்பமே உருவாகவும் ஆய்விடும். இம்மனிதக் கப்பலையே சாச்வதமாக நம்பியுள்ள பெண்டு பிள்ளைகள், மக்கள் மனிதர்கள் முதலிய எல்லோரையும் இவனுடைய அஜாக்ரதையே சிதறப் பதற அடித்துவிடும். ஆகையால் சம்சார சாகரத்தைக் கடக்க மனமாகிய மாலுமி, வெகு பக்குவமாய் தெய்வ பக்தியும், உறுதியும் வழுவாமல் இருந்தால், அச்சாகரத்தைக் கடந்து கடவுளின் பாதங்களாகிய அக் கரையை அடைந்து இன்புறலாம். ஏ மட நெஞ்சே! தெளிந்து அறிந்துகொள். மயங்காதே! தியங்காதே!

பாட்டு

மாலுமி மரக்கலம் காத்தற்போல் மனிதர்க்கு
வாழ்க்கைக் கடல் கடந்து வானுல கேகிட—
மாலுமியாம் மனமே (தூய்)

என்ற மற்றோர் அடியைப் பாடியவாறு கீதத்தின் ஒலி வெகு தூரம் போய் விட்டது. இந்த அதியற்புதமான கானத்தின் அழகும், அர்த்தமும், பேரானந்தமுமே மைதிலியின் புண்பட்ட வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஜீவ சக்தியாய், வாழ்க்கையின் நாதமாய் அமைந்தன.

9

வேணி:—மணி 8 அடிக்கப் போறது. எப்படி தேச்சாகப் போறதுன்னு பயப்பட்டதுக்கு கடவுள் எப்படியோ ஒரு அபரிமிதமான சக்தியைக் குடுத்து காரியத்தை முடிச்சுட்டார். இதெல்லாம்தான் தெய்வச் செயல் இன்றது.

மூர்த்தி:—வேணி! எப்போதும் நம்பினவாளெ அந்த பரம் பொருள் கைவிடவே மாட்டான். எல்லாம் அவனருள்.

வாஸந்தி :—அப்பா! வாத்தியாரம்மாவும், இன்னொரு அம்மாவும் வராப்பா.

மூர்த்தி :—அம்மணீ! வாருங்கோ; வாருங்கோ! (வேணி பாயைப் போட்டு உட்காரச் சொல்லுகிறுள்; இருவரும் உட்காருகிறுர்கள். மூர்த்தி தைத்த துணிகளை ஒழுங்காக மடித்து வைத்திருப்பதை எடுத்துக் காட்டி பழந் துணிகளையும் கணக்குப்படிக்கு கொடுத்துவிட்டு) அம்மணீ! சரிதானே!—என்ருன்.

வந்தவள் :—(துணிகளைப் பிரித்துப் பார்த்துவிட்டு) ஆஹா! தர்ஜீ! நீர் ஏதோ வீட்டுக்குள்ளே சின்ன தையல்காரனுட்டும் உட்காந்து தைக்கறேரே யன்றி வேலே ஷாப்பு வேலேயை விட அற்புதமா இருக்கே....வாத்தியாரம்மா பாத்தங்களா!....என்ன அழகா தெச்சிருக்கார்? தர்ஜீ! இதுக்கெல்லாம் என்ன கூலியாச்சு?

மூர்த்தி :—அம்மா! நான் எப்போதும் ஒரே கூலிதான் வாங்கரது. எல்லாத்துக்கும் சேத்து நாடா டேப்புகள், ரிப்பன்கள் உள்பட 5 ரூபாயாரது.

வந்தவள் :—என்ன! அஞ்சு ரூபாயா! அடாடாடா....போன தபா நான் நாலு கவுனும், ரெண்டு சொக்காயும் தெக்கச் சொல்லி ஒரு ஷாப்புலே குடுத்தேன். அதுக்கு மட்டும் 4 ரூபா வாங்கிட்டானே. ஒரு ஜாக்கெட்டுக்கு நீர் ரெண்டணுவா போட்டீர்?

மூர்த்தி :—தாயே! ஆமாம். அதையாவது ச்வாமி தவருது குடுத்தா போதும். எனக்குப் போட்டி போட்டு பேராசைப்பட இஷ்டமில்லெ. அந்த மாதிரி எண்ணமே பகவான் இதுவரையில் குடுக்கல்லெ. இனிமேயும் குடுக்காதிருக்கும்படிதான் வேண்டிக் கிறேன்.

வந்தவள் :—இந்த மாதிரி உத்தம குணத்தை காண்பதே அரிது. நான் ரொம்ப அவசரமா வேலெ குடுத்து ச்ரமப்படுத்திவிட்டேன். இதோ பணம்—என்று 5 ரூபாய் நோட்டையும், கூட இரண்டு ரூபாயையும் சேர்த்துக் கொடுத்துவிட்டு-இதையும் வாங்கிக் கணம். அவசரமாக வேலே செய்ததுக்கு அதிகப்படி இது. இதே வேலெயே ஷாப்பிலே இருந்தா 15 ரூபா கட்டாயம் பில்லு போடு

வான். நான் வரட்டுமா! உங்களுக்கு ரொம்ப வந்தனம்—என்று கூறியவாறு துணி மூட்டையுடன் எழுந்தாள். வாத்தியாரம்மா வும், இவர்களுக்கு வந்தனம் செய்து "ரொம்ப சந்தோஷம், நாங்கள் போய் வருகிறோம்" என்று உத்திரவு பெற்றுச் சென்று விட்டாள்.

குழந்தை வாஸந்திக்கும், ராஜுவுக்கும் இந்த ரூபாயைப் பார்த்த உடனே உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. முகத்தில் சிரிப்பும் இன்பமும் தாண்டவமாடுகிறது. ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு குதித்தபடியே தமக்கு பட்டாசு நிச்சயமாய் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் மகிழ்ந் தார்கள். மூர்த்தியும், வேணியும் குழந்தைகளைப் பார்த்து பரம சந்தோஷமடைந்தார்கள்.

மூர்த்தி :—வேணீ! கடவுள் கிருபையில் கார்த்தி பண்டி கைக்கு குறைவில்லாமெ கிடைத்துட்டது. நீ வென்னீர் போடு. நான் கடைக்கி போய் சீக்கிரம் எண்ணை, சீக்கா பொடி, திரி நூல், அகல்கள், ஸ்வாமி நிவேதனத்துக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம்....என்று முடிப்பதற்குள் வாஸந்திகா ஓடி வந்து, பிதா வைக் கட்டிக் கொண்டு "எப்பா! பட்டாசு" என்றாள். மூர்த்தி சந்தோஷத்துடன் அவளைத் தட்டிக் கொடுத்துவிட்டு "கண்ணே வாஸந்திகா! பட்டாசு இல்லாமெயா? அதுகூடத் தாண்டாப்பா வாங்கப் போறேன். எல்லாம் வாங்கிண்டு வரேன்....குழந்தை களுக்கு எண்ணை தேய்ச்சு நீயும் தேய்ச்சுக்கோ; நான் போய் வறேன்" என்றான்.

ராஜு "அப்பா! மத்தாப்பு, புருசுவத்தி, கம்பிவத்தி எல் லாம் வாங்கிண்டு வரயாப்பா?" என்றான். அவனைத் தூக்கி யணைத்து முத்தமிட்டுப் பின் "கண்ணே! எல்லாம் வாங்கிண்டு வரேன்" என்றான். இதற்குள் வேணி எண்ணெய் பாத்திரம் கொண்டு வந்து கொடுத்தாள். மூர்த்தி அதை எடுத்துக்கொண்டு சந்தோஷமாகச் சென்றான். குழந்தைகளும் பட்டாசு வரும் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டே வழி யனுப்பினார்கள்.

## 10

மூர்த்தியின் இதயம் சந்தோஷ மயமாக மாறி நிறைந்தது. முதலில் பட்டாசு கடைக்கே சென்று ஒரு ரூபாயிக்கு பட்டாசு, மத்தாப்பு முதலியவைகளை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டான். அகல்களும், சட்டி பானைகளும் விற்கும் கடைக்குச் சென்று அவற்றை வாங்கினன். எண்ணெய், திரிநூல், கற்பூரம், தேங்காய், பழம், வெல்லம், காய்கறிகள் முதலிய சகலத்தையும் வாங்கிக் கொண்டு, சாமான்களைப் பார்க்கும்போது அவன் சந்தோஷத்திற்கு இச் சாமான்கள் சிகரம் வைத்ததுபோல் தோன்றின. இந்த பட்டாசைக் கண்டதும் குழந்தைகள் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்று நினைக்கும்போது அவனுடைய ஆனந்தம் கரை புரண்டது. பையில் சாமான்களையும், துணி மூட்டையில் காய் கறிகளையும் கட்டி தோள்மீது போட்டுக் கொண்டும், எண்ணெய்த் தூக்கை கையில் பிடித்துக் கொண்டும் சீக்கிரமாக வீட்டை நோக்கி நடக்க வாரம்பித்தான்.

கார்த்திகைப் பண்டிகையின் குதூகலம் குழந்தைகள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டு, புதிய உடை உடுத்திக்கொண்டு பட்டாசு சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வீட்டு வாசற்படியிலும் மாவிலைத் தோரணங்களும், மாவு கோலங்களும் வெகு அற்புதமா யிருந்தன. சிலர் அவ்வருடம் கல்யாணம் செய்த பெண்களை மாமியார் வீட்டிற்கு சீர் வகைகளோடு கொண்டு விடும் காட்சிகளையும் பார்த்துக் கொண்டே, மூர்த்தி "நம் வாஸந்திகாவுக்கும் விவாகமாகிவிட்டால் இப்படித் தானே மாமியார் வீட்டிற்குப் போவாள் என்று எண்ணியபடியே ஆனந்தத்துடன் நடக்கிருன்.

அச் சமயம் இரண்டு பெரிய வடக்கத்திக் காளை மாடுகள் பூட்டிய வில் வண்டி கண கணவென்று மணி யொலிக்க, கடகடவென்று பறந்து கொண்டு வந்தது. எதிரில் வந்த மோட்டார் லாரியின் பேரிரைச்சலையும் வேகத்தையுங் கண்டு புதிதாக வாங்கப்பட்டு வந்துள்ள காளை மாடுகள் மிரண்டு போய் வண்டி

யைத் தாறு மாறுமாக இழுத்துக் கொண்டு ஓடியதில், எதிரில் வந்த மூர்த்தி ஏர் கால் பட்டுக் கீழே விழுந்து விட்டான்.

அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! மூர்த்தியின் சாமான்கள் மூலைக்கொன்றாகச் சிதறியடித்துக்கொண்டு ஓடிவிட்டதையும், கீழே அடிபட்டுக் கிடக்கும் மூர்த்தியையும் காண கும்பல் கூடி ஒரே கூச்சலும், கலாட்டாவாகவும் ஆய் விட்டன. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்றதுபோல் மூர்த்தியின் சாமான்கள் மூலைக் கொன்றாகச் சிதறியதைக் கண்ட சில சோதாக்கள், ஆளுக்கொன்றாக எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள். எண்ணெய் பூமா தேவிக்கு ஸ்நானமாக அர்ப்பணமாகியது. வரும்பொழுது மூர்த்தியின் ஆனந்தம் இருந்த வேகமென்ன! இப்போது உடைந்து சிதறிப் போய்விட்ட விபரீதமென்ன! என்னே உலகம்! என்னே மனித வாழ்க்கை!

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# உளுத்த இதயம்

இதைப் படிக்கும்போது உங்கள் இதயமும், மன
மும், கண்களும் உங்கள் கட்டுக்கடங்கா
தென்பது திண்ணம். ஒவ்வொரு வரியி
லும் உங்களைப் பரவசமுறச் செய்
யும் சக்தி வாய்ந்த
நாவல் இது.

விலை அணா நான்கே தான்.

# வாழ்க்கையின் நாதம்

அல்லது

# வானக் குயில்

ஆவலை
வடிவமாய்த்
தந்தையின் வரவை
எதிர்பார்க்கும் குழந்தை
களின் கதியும், வேணியின்
கதியும் எப்படியாகிறது? அவர்
களின் எதிர்காலத்தின் வினோ
தங்கள் என்ன? மாயக் கொள்ளைக்
கூட்டம் எப்படித் தோன்றி எங்கே
கொள்ளையடிக்கப் போகிறது? அந்த அற்
புதத்தை எவ்விதம், யார் கண்டு பிடிக்கப்
போகிறார்கள்? தாயின் அன்பே ப்ரதானமாகி
செய்யத் தகாத காரியத்தைச் செய்யும் வீர
சிகாமணி யார்? எதற்காக மூர்த்தி சிறையில் வாடு
கிறான்? பரதேசிக் குழந்தைகளின் தவிப்பு எப்படி?
சமாதியருகில் கண்ணீர் விட்டுக் கதறும் உயிர்கள் எவை?
இளநங்கையான மைதிலிக்கு என்ன விமோசனம்? கிழவரின்
சந்தேகம் எத்தனைப் படுகுழிகளைத் தோண்டுகிறது? காதல் புயல்
காற்று யாரைச் சுற்றியடிக்கப் போகிறது? வானக்குயிலின் கீத
மகிமை என்ன? யார் யாருடைய வாழ்க்கைக்கு எது எது நாதமாய்
அமைகிறது? இன்ப நாதமா! துன்ப நாதமா! பக்தி நாதமா!
முக்தி நாதமா! பயங்கர நாதமா! ரமணீய நாதமா? இவைகளும்
இன்னும் பலவிதமான உலகானுபவங்களும், உண்மைச்
சித்திரங்களும் மனத்தைக் கலக்கி திடுக்கிடச் செய்து
ப்ரமிக்க வைக்கும் பல அரிய சம்பவங்களும் நிறைந்த இந்த
நாவலை அடுத்து வரும் இதழ்களில் படித்து இன்புறுங்கள்.

---


## நமது விளம்பர விகிதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்துக்கு ஒரு முறை | | ரூ. | 12 | 0 | 0 |
| அரை பக்கத்துக்கு | ,, | ,, | 6 | 8 | 0 |
| கால் பக்கத்துக்கு | ,, | ,, | 4 | 0 | 0 |
| உள்ளட்டைக்கு ஒரு முறை | | ,, | 15 | 0 | 0 |

நீண்ட கால விளம்பரங்களுக்கு தனிச் சலுகை காட்டப்படும்.

மானேஜர்.

# ஜகன் மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

| 15-வது ஆண்டு ஆரம்பம் | நாவல் மாதப் பத்திரிகை | ஜனவரி 1938 |
|---|---|---|

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.
எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

| வருஷ சந்தா ரூ. 1—8 | ஜீவிய சந்தா ரூ. 25 | தனிப் பிரதி அணா 2 |
|---|---|---|

## ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

### வெளிநாட்டு சந்தா நேயர்களே!

தமிழ்ப் பத்திரிகைகளில், வெளி நாட்டினருக்காகச் சந்தாவை அதிகமாக்காத பத்திரிகை நமது மோகினி ஒன்றுதான் என்பது நீங்கள் அறிந்த விஷயம். உள் நாட்டில் காலணா தபாற் செலவில் அனுப்பும் பத்திரிகையை வெளி நாட்டிற்கு அனுப்ப முக்காலணா ஆவதால் நமக்குச் செலவு அதிகமாயினும், தமிழ் மக்கள் யாவரும் ஒரே விலையில் நமது பத்திரிகையைப் படிக்க சௌகரிய மளிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சந்தாவை அதிகரிக்கவில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்களாலியன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பி உங்களுக்கு வேண்டிய இனாம் புத்தகங்களை பெற்றுக்கொள்வதுடன், நமக்கு ஆதரவளிக்கக் கோருகிறோம்.

### "ஜகன்மோகினி"யின் அன்பர்களுக்கு எமது வேண்டுகோள்

ஒவ்வொரு ஊரிலும்—முக்கியமாக ரெயில்வே ஸ்டேஷனுள்ள அல்லது அதற்கருகிலுள்ள ஊரிலும்—ஏஜண்டை ஏற்படுத்தி, நமது சஞ்சிகையையும், இதர நாவல்களையும் நமது அன்பர்களுக்கு சுலபமாயும், அனாவசியமான காலதாமதமும், தபாற்செலவு மில்லாமலும் கிடைக்கச் செய்யவேண்டுமென்பது எமது அவா. அதைப் பூர்த்தி செய்வதற்காக நமது சந்தா நேயர்கள் நமக்கு ஏற்கனவே ஏஜண்டுகள் இல்லாத ஊர்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டுகளை நமக்கு நேராக எழுதச் சொல்லியோ அல்லது அவர்களின் விலாசத்தை நமக்குக் கொடுத்தோ உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறோம். தற்போது நமக்குள்ள ஏஜண்டுகளின் விவரம் இதனுடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

# “ஜகன்மோகினி” கிடைக்கும் இடங்கள்

சென்னையில் பத்திரிகைகள் விற்கும் கடைகளிலும்,
‘சுதேசமித்திரன்’ புத்தகசாலை ரயில்வே ஸ்டால்களிலும்,
அடியிற் கண்டவர்களிடமும் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**மலாய் நாட்டு எஜண்டு :**—கோலாலம்பூர் : பி. சிவகுரு அண்டு ப்ரதர்ஸ், 108, பிரிக்பீல்ஸ் ரோடு, தபால் பெட்டி நெ. 255.

**ரங்கூன் :** புவனகதா புத்தகசாலை, நெ. 229, பேயர் வீதி, கல்கத்தா ரோடு, ரயில்வே ப்ளாக்.

**கொழும்பு :** ஸ்ரீ. ஏ. ஆர். சாமி, 191, நோரிஸ் ரோடு.

**பம்பாய் :** டி. சாரி அண்டு கோ., பீம்திவாலா பில்டிங், மதுங்கா. (பம்பாய். 19)

**கல்கத்தா :** ஆல் இந்தியா ஜெனரல் ஸப்ளை எஜன்ஸி, பவானிபூர்.

**சேலம் :** கோபால் நியூஸ் மார்ட், சின்ன கடைத்தெரு.

**பாலக்காடு :** ஸ்காலர் நியூஸ் மார்ட்.

**தங்கவயல் :** நியூஸ் எஜன்ஸி, அண்டர்ஸன் பேட்டை.

**உதகமண்டலம் :** டி. எம். ஆரோக்கியசாமி அண்டு சன்ஸ், மார்க்கட்.

**வேலூர் :** ஸ்ரீ. டி. கே. ராமசேஷய்யர், நியூஸ் எஜண்டு,

**ராசீபுரம் :** ஸ்ரீ. ஆர். ஜி. ராமகிருஷ்ண ஐயர், ஸ்ரீராம விலாஸ் லைப்ரெரி.

**ஈரோடு :** ஸ்ரீ. வி. சௌந்தரராஜய்யங்கார், கெரோஸின் டிப்போ, 245, லார்ட் நேபியர் வீதி.

**திருச்சூர் :** ஜெனரல் நியூஸ் எஜன்ஸி.

**தர்மபுரி :** ஸ்ரீ. டி. வி. கிருஷ்ணமூர்த்தி, கடைத் தெரு.

**திருச்செங்கோடு :** ஸ்ரீ. டி. ஏ. செல்லமுத்து.

**கோயம்பத்தூர் :** ரிலையன்ஸ் ஸர்குலேடிங் லைப்ரெரி, வெரயடி ஹால் ரோட்

**பவானி :** ஸ்ரீ. ஏ. ஆறுமுகம், மகாலிங்க விலாஸ் புத்தகசாலை.

**கோச்சி :** ஸ்ரீ. ஜி. நாராயணய்யர்.

**பேரளம் :** ஸ்ரீ. கே. மஹாதேவன்.

**ஷண்முகநாதபுரம் :** ஸ்ரீ. சொ. ராமநாதன்.

**புதுக்கோட்டை :** ஸ்ரீ. பி. வி. சுப்ரமண்யம், கீழண்டை வீதி.

**மதுரை—விருதுநகர் :** குமரன் நாவல் டிபோ.

**கரூர் :** ஸ்ரீ. கே. வி. செங்கபதி நாயுடு, கிழக்கு பலிகவாரு தெரு.

**திருச்சினப்பள்ளி :** எஸ். அஜீபா சாயபு, வைரவன் கோயில் தெரு.

**மணப்பாரை :** ஸ்ரீ. எம், என், வைத்தியநாதய்யர், லக்ஷ்மி விலாஸ்,

தூத்துக்குடி : 1. ஸ்ரீ. பி. சாமுவேல், கிரேட் காட்டன் ரோடு.
2. ,, டி. ராமசாமி (காதி வஸ்திராலயம்.)

மன்னார்குடி : ஸ்ரீ. எல். எஸ். ராஜகோபாலன்.

கோடைவாசல் : ஸ்ரீ. கே. வி. கோதண்டபாணி பிள்ளை, கடைத்தெரு.

புதுச்சேரி : ஸ்ரீ. ரா. நாராயணசாமி, 107, மதராஸ் ரோட்.

கீழச்சிவல்பட்டி : ஸ்ரீ. பழ. ச. கருப்பன் செட்டியார்.

நாகப்பட்டணம் : ஸ்ரீ. பி. வெங்கடராமன், சாசுவத நிதி கட்டிடம், நீலா தெற்கு வீதி.

திண்டுக்கல் : ஸ்ரீ. கே. எம். ராமசாமி, தினமணி ஏஜண்டு.

கும்பகோணம் : கே. எஸ். நாராயணஸ்வாமி அண்டு கம்பெனி.

பெரிய காஞ்சீபுரம் : ஸ்ரீ. என். சுப்ரமண்யம், 12, ரெட்ட பிள்ளையார் கோவில் தெரு.

திருநெல்வேலி ஜங்ஷன் : ஸ்ரீ. எஸ். அய்யம்பெருமாள் பிள்ளை, வடக்கு ரத வீதி.

மாயவரம் : ஜனுப் ஷேக் ஊஸ்மான் ஸாகேப்.

செங்கற்பட்டு : மாருதி நியூஸ் ஏஜன்ஸி, 24, பெரிய மணிகார் தெரு.

---


# மலாய் நாட்டு வாசிகளுக்கு !

## ஒரு சந்தோஷச் செய்தி

மலாய் நாட்டின் பல பாகங்களிலுள்ள தமிழ் அன்பர்களின் சௌகரியத்தைக் கருதி, எல்லா பத்திரிகை விற்போரிடமும் "ஜகன்மோகினி"யும், ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய இதர நாவல்களும் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோமாதலால் அவர்களது ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

பி. சிவகுரு அண்டு பிரதர்ஸ்,
108, பிரிக்பீல்ஸ் ரோட்,
கோலாலம்பூர்.

# நமது சந்தா நேயர்களுக்கு!

## முக்கிய அறிவிப்பு

நமது அன்பர்களில் பலர், நம் புத்தகங்களுக்கு ஆர்டர் செய்கையில், தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் வாங்கி ஒரே பார்சலாக அனுப்பும்படி கேட்டுக்கொள்வதால் அவர்களது சௌகரியத்தை உத்தேசித்து அவ்வாறே செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையினால் அன்பர்கள் வேண்டிய புத்தகங்களின் பெயருடன், பிரசுரிப்போரின் பெயரும் தெரிவித்தால் கால தாமதமின்றி வாங்கி அனுப்பக்கூடும். இதனடியில் கண்டுள்ள புத்தகங்களுக்கும், மற்றவற்றிற்கும் ஆர்டர் செய்கையில் அவற்றின் விலையுடன் தபாற்செலவுக்காக ரூபாய்க்கு இரண்டணா வீதம் சேர்த்தனுப்பவும்.

---

## ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார்

### எழுதிய நாவல்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் | 7 | 8 | இராஜேந்திர மோஹனா | 1 | 4 |
| சௌந்திர கோகிலம் | 6 | 0 | வஸந்த கோகிலம் | 1 | 4 |
| மாயா விநோதப் பரதேசி | 5 | 0 | வித்யாசாகரம் | 1 | 4 |
| திகம்பர சாமியார் பால்ய லீலை | 5 | 0 | முத்துலக்ஷ்மி | 1 | 4 |
| | | | நீலலோசனி | 1 | 2 |
| மதன கல்யாணி | 4 | 8 | கலியாண சுந்தரம் | 1 | 2 |
| புஷ்பாங்கி | 3 | 8 | நங்கை மடவன்னம் | 1 | 2 |
| மிஸிஸ் லைலா மோஹினி | 3 | 0 | சிங்கார சூர்யோதயம் | 1 | 2 |
| மேனகா | 3 | 0 | மிஸ்டர் பூச்சாண்டி எம்மே | 1 | 2 |
| கும்பகோணம் வக்கீல் | 3 | 0 | டாக்டர் சோணாசலம் | 1 | 2 |
| விலாசவதி | 3 | 0 | சோமசுந்தரம் | 1 | 2 |
| மன்மத புரியின் மூடு மந்திரம் | 2 | 12 | பச்சைக்காளி | 1 | 2 |
| | | | சமய சஞ்சீவி | 1 | 2 |
| கனகாம்புஜம் | 2 | 12 | சொக்கன் செட்டி | 1 | 2 |
| பாலாமணி | 2 | 8 | பூஞ்சோலையம்மாள் | 1 | 2 |
| சுயமரணபுரி மர்மம் | 2 | 8 | தங்கம்மாள் | 1 | 2 |
| தில்லைநாயகி | 2 | 4 | சிவராம கிருஷ்ணன் | 1 | 2 |
| துரைக்கண்ணம்மாள் | 2 | 4 | பிச்சைமுத்து கோனார் | 1 | 2 |
| சதானந்த போதக சாமியார் | 2 | 4 | பாவாடைச் சாமியார் | 1 | 2 |
| பன்னியூர் படாடோப சர்மா | 2 | 4 | நவநீதம் | 1 | 2 |
| திருபுர சுந்தரி | 2 | 0 | கட்டாரித்தேவன் | 1 | 2 |
| லக்ஷ்மீகாந்தம் | 2 | 0 | மாயா சுந்தரி | 1 | 2 |
| காந்திமதி | 1 | 12 | திவான் லொடபடசிங் | 1 | 2 |
| வஸந்தமல்லிகா | 1 | 8 | மங்கையர் பகட்டு | 0 | 12 |

## ஸ்ரீ. ஜவஹர்லால் நேருவின்
## சுய சரித்திரம்

ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய உயரிய பொக்கிஷம். 1040 பக்கங்களுள்ளது.

விலை ரூ. 3. தபாற் செலவு அணா 12.

| | | |
|---|---|---|
| வாழ்க்கையின் வெறுப்பு (டால்ஸ்டாய்) | அணா | 4 |
| உத்தம வாழ்க்கை ,, | ,, | 2 |
| குழந்தை ராமு (சமூக நாடகம்) | ,, | 4 |
| கண்ணன்—என் கவி (பாரதியாரின் கவிதையும், இலக்கிய பீடமும்) | ,, | 6 |
| மதுவிலக்கு மங்கை (அமெரிக்க நூலாசிரியர் அப்டன் சிங்க்ளேர் எழுதியதைத் தழுவியது) | ,, | 8 |
| மார்க்க அரேலியர் ஆத்ம சிந்தனை (ஸ்ரீ ராஜாஜியின் மொழி பெயர்ப்பு) | ,, | 8 |
| ராஜாஜி குட்டிக் கதைகள் | ,, | 12 |
| விஷ விருக்ஷம் (பங்கிம் சந்திர சாட்டர்ஜி) | ரூ. | 1 8 |

## அலையன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| ஸ்ரீ ஜவஹர்லால் நேரு | 0 5 | ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத் | 0 4 |
| ஸ்ரீ மோதிலால் நேரு | 0 12 | காங்கிரஸ் சரித்திரம் | 0 5 |
| ஸ்ரீ வித்தல்பாய் படேல் | 0 12 | | |

## பாரதியார் நூல்கள்

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| கதைக்கொத்து | 0 8 | வசனங்கள் | 2 0 |
| பகவத்கீதை (காலிகோ பைண்டு) | 0 12 | கவிதைகள் | 2 8 |
| | | கட்டுரைத் தொகுதிகள் | |
| ,, ராப்பர் பைண்டு | 0 8 | தத்துவம் | 0 10 |
| பாகெட் கீதை (தமிழ் உரையுடன்) காலிகோ | 0 7 | மாதர் | 0 8 |
| | | கலைகள் | 0 8 |
| ,, ராப்பர் | 0 5 | சமூகம் | 0 8 |

# மந்தாகினி

அல்லது

# கிராமத் தொண்டு

ஸ்ரீமான் எம். ஸி. ஸ்ரீநிவாஸன் எம். ஏ., பி. எல்.

எழுதிய அருமையான சமூக நாவல்

விலை அணா 8. தபாற் செலவு அணா 1—3 பை

முன் பணமனுப்பவும். வி. பி. கிடையாது.

காலஞ் சென்ற பண்டித திரு. ராகவாசாரியார்

இயற்றிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| துருவ வெண்பா | 0 8 | திருமால் வெண்பா | 0 4 |
| சம்பு ராமாயணம் | 0 10 | சிவபிரான் துதி | 0 3 |
| நீதி மஞ்சரி | 0 5 | ராஜ ராஜேச்வரி | 0 2 |

ரூ. 1—8 முன்பணமனுப்புவோருக்கு 6 புத்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| பங்கு 1<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>ஆனந்தஸாகர்<br>பிச்சைக்காரக் குடும்பம் | இனாமாக நாவல்கள் வேண்டுமா ? | பங்கு 2<br>பரிமளகேசவன்<br>உத்தமசீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>புத்தியே புதையல் |
| பங்கு 3<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின் கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பண மனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில் | பங்கு 4<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>மங்களபாரதி |
| பங்கு 5<br>வைதேகி<br>பத்மசுந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனா | ஒன்று இனாம் | மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோர்க்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம் |

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

| | ரூ. | அ. | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனை | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மணிகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பக விஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| அனாதைப் பெண் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| சாந்தகுமாரி | 1 | 0 | 0 | 14 |
| மாயப்ரபஞ்சம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ராபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |
| அன்பின் சிகரம் | 0 | 4 | | |
| ஸா[illegible]ராஜன் | 0 | 4 | | |

'ஜகன்மோகினி' சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

முன்பணமனுப்பி
தபாற் செலவின்றி
பெற்றுக் கொள்ளுங்கள்.
வி. பி. கிடையாது.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, கோடித்தெரு, திருவல்லிக்கேணி.

183014

18—12—37
சனிக்கிழமை முதல்
சென்னை கிரௌன் டாக்கிஸின்
வெள்ளித் திரையில்
பேபி ஸரோஜா, கமலகுமாரியுடன்
உங்களை மகிழ்விக்க



பாலயோகினியில்
(தெலுங்கு)
தோன்றுகிறாள்.
அனைவரும் வருக!
ஆனந்தம் பெருக!!

விவரங்களுக்கு:

**மகாலக்ஷ்மி ஸ்டுடியோஸ் லிமிடெட்,**

110, ராயப்பேட்டை ஹைரோட், சென்னை.

"JAGANMOHINI" Vol. XV No. 1 Regd. No. M. 2210



தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.